# இந்திய ஆட்சிமன்ற உப சபாநாயகர் பதவியிலிருந்து காதில்கார் ராஜிஞமா?

Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 11
இதழ்: 263
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஐப்பசி 17 ஷஃபான் 21 ஞாயிற்றுக்கிழமை [2-11-69]

தீபாவளி
மலிவு விற்பனை!
உங்களுக்கும் உங்கள் குழந்தைச் செல்வங்களுக்கும் தேவையான சகலவிதமான
ஜவுளி வகைகளும்
றெடிமேட் உடுப்புகளும்
மலிவான விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.
விக்னேஸ்வரா
ஜவுளி மாளிகை
(பஸ் நிலையத்துக்கு முன்) யாழ்ப்பாணம்.

புதுடில்லி, நவ.1

இந்திய ஆட்சிமன்ற உப சபாநாயகர் பதவியை திரு. காதில்கார் ராஜிஞமாச் செய்துள்ளார். அவரது ராஜிஞமாவுக்கான காரணம்பற்றி உடனடியாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை. ஆனாலும் அவர் திருமதி இந்திராவின் மந்திரிசபையில் ஒரு புதிய மந்திரியாக நியமிக்கப்படக் கூடுமென்றும் இதுவே அவரது ராஜிஞமாவுக்குக்காரணமென்றும் அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகின்றது. சமீபத்தில் சபாநாயகர் பதவிக்கு உபசபாநாயகர் திரு. காதில்காரை ஆளும்கட்சியினர் பிரேரிக்காததனால் உப சபாநாயகர் பதவியிலிருந்து உடனடியாகவே விலகுவதற்கு திரு. காதில்கார் முன் தானத்தை ஏற்றுக்கொண்டு வந்தார் ஆயினும் பிரதமர் இந்திரா தெரிவித்த சமாதானத்தை இன்றுவரை உபசபாநாயகராகப் பணியாற்றிவந்தார்.

## மாணவ ஆசிரியர் தெரிவு
## 'எம்.பி.க்களுக்குத் தெரியாது'

யாழ்ப்பாணம், ஞாயிறு

'அண்மையில் வெளியான மாணவ ஆசிரியர் பரீட்சை முடிவுகள் பற்றி ஆட்சி மன்ற உறுப்பினர்களுக்கு எதுவுமே தெரியாது. எங்கள் சிபார்சின் மீது எவருமே தெரிவுசெய்யப்படவில்லை கல்வி அமைச்சின் முடிவின்படி இத்தெரிவு நடந்தது. பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டபின்னரே எமக்கும் யார் யார் தெரியப்பட்டார்கள் என்பது தெரியவந்தது.'

கிளிநொச்சி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் இவ்வாறு தெரிவித்தார்

வேலணை செட்டிபுரம் தமிழரசு வாலிப முன்னணி நிறுவற்கூட்டம் ஐயனார் கோவில் வீதியில் நடைபெற்றது, இக்கூட்டத்துக்குத் தலைமைவகித்த திரு. கா. பொ. இரத்தினம் எம், பி. மேலும் பேசியதாவது:-

தற்போது புதிய பாதைகளில் ஒரு மைலுக்கு 10 சதமாக பஸ் கட்டணம் அறவிடப்படுகின்றது. பழைய பாதைக ஒருளில் மைலுக்கு 3 சதத்துக்குக் குறைவாகவே அறவிடப்படுகின்றது. இதனைக் கண்டித்து ஆட்சி மன்றத்தில் நாம் குரல்எழுப்பினோம். அடுத்த தேர்தல் வரை இது குறைக்கப்படமாட்டாது என்பது தெளிவான உண்மை

தற்போது பட்டதாரி ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சை நடைபெறுகின்றது. இது என்ன அடிப்படையில் எவ்வாறு நடைபெறுகின்றது என்பது எவருக்கும் தெரியாது. இதில் எம் பி மாருக்கு எந்தப் பங்குமே கிடையாது என்றும் திரு. கா பொ இரத்தினம் இங்கு தெரிவித்தார்

தேர்தல்நெருங்க நெருங்க வாக்குறுதிகளை மக்களுக்குக் கொடுக்கக்கூடாதென்றும், நிறைவேற்றக்கூடிய வாக்குறுதிகளை மட்டும் எம் பிக்கள் கொடுக்கவேண்டும் என்றும் அவர் மேலும் பேசினார்

திருவாளர்கள் க இராநாதன், ஆ சந்திரசேகரம், சி சிவராசா ஆகியோரும் பேசினா (கா நி)

## காங்கிரஸ் கட்சி பிளவு வலுக்கிறது

# இந்திரா - நிஜலிங்கப்பா இருவரும் தனித்தனியே கூட்டம் நடத்தினர்

## சுவீப்முடிவுகள்

கொழும்பு, ஞாயிறு

தேசியலொத்தர்சபையின் 270-வது தேசியசுவீப் முடிவுகள் வருமாறு:-

முதலாவது பரிசு
34 C 0105 ரூ. 100,000

இரண்டாவது பரிசு
10 L 0811 ரூ. 40,000

மூன்றாவது பரிசு
26 U 0419 ரூ. 10,000

தலா ரூபா 699 - 90சதம் பரிசுபெறும்100டிக்கட்இலக்கங்கள் வருமாறு:

| | |
|---|---|
| 12 Q 0210 | 32 B 0048 |
| 31 A 0376 | 13 J 0020 |
| 34 J 0872 | 17 F 0495 |
| 09 D 0011 | 02 E 0597 |
| 30 Z 0416 | 02 X 0565 |
| 36 N 0017 | 09 D 0003 |

| | |
|---|---|
| 06 o 0098 | 10 Z 0364 |
| 07 F 0603 | 35 W 0213 |
| 33 J 0188 | 43 B 0778 |
| 15 D 0173 | 28 R 0491 |
| 08 o 0333 | 28 B 0676 |
| 31 L 0190 | 10 V 0446 |
| 31 A 0324 | 41 K 0692 |
| 08 o 0111 | 06 Q 0322 |
| 16 Z 0022 | 07 X 0258 |
| 11 N 0760 | 11 D 0282 |
| 32 P 0267 | 34 G 0809 |
| 41 K 0647 | 24 P 0544 |
| 40 L 0395 | 24 Y 0761 |
| 13 E 0854 | 10 M 0760 |
| 28 T 0335 | 32 Q 0671 |
| 28 H 0622 | 34 S 0925 |
| 42 U 0604 | 10 X 0331 |
| 13 N 0710 | 35 P 0339 |
| 13 F 0669 | 17 X 0963 |
| 22 R 0997 | 13 B 0091 |

## அ. இ. கா. கமிட்டியை அழைக்கும் கோரிக்கை ஒழுங்கற்றதாம்

### 'புதிய கட்சி ஆரம்பிக்கும் திட்டம் எதுவும் இல்லை'

— திருமதி காந்தி

புதுடில்லி, நவ.1

திரு நிஜலிங்கப்பாவை காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து விலக்கி புதிய தலைவர் ஒருவரைத் தெரிவு செய்வதற்காக அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தைக் கூட்டவேண்டும் என்று திருமதி இந்திரா காந்தியின் கோஷ்டியினர் விடுத்திருக்கும் கோரிக்கை ஒழுங்கற்றதென இன்று காலையில் காங்கிரஸ் கட்சி கட்டிடத்தில் நடைபெற்ற கட்சியின் காரியக்கமிட்டி முடிவு செய்தது.

திரு நிஜலிங்கப்பா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பிரதமமந்திரி திரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கேரளத்தில் புதிய மந்திரிசபை

திருவனந்தபுரம், நவ. 1

கேரளத்தில் வலது சாரி கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான புதிய மந்திரிசபை இன்று பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டது.

இந்த மந்திரிசபையில் எட்டு மந்திரிகள் இருக்கிறார்கள். திரு. அச்சுத மேனன் முதல் மந்திரியாகப் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

### 30,000 பேர் பயிற்சி பெற்றனர்

கோட்டை, சனி

## "உழைப்பினாலும் நட்பினாலும் இரு நாடுகளும் பின்னிப்பிணைந்தவை"
### யாழ். நகரில் ஜெர்மன் குடியரசு ஸ்தானிகர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"இலங்கை மக்களுக்கும் ஜெர்மன் ஜனநாயக குடியரசு மக்களுக்குமிடையே இருக்கும் பரஸ்பர நேச மனப்பான்மை இருநாட்டினதும் சமாதான உழைப்பாலும் பேரார்வம் கொண்ட நட்பினாலும் பின்னிப் பிணைக்கப்பட்டதாகும்."

ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் இலங்கை ஸ்தானிகரான திரு. கிருவ்ட் பும்பெல் நேற்றுமுன் தினம் இரவு யாழ்ப்பாணத்தில் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி குடியரசின் யாழ்ப்பாணக் கிளை அங்குரார்ப்பணக் கூட்டம் யாழ். மலாயா கபே மேல்மாடியில் நடைபெற்றது.

கூட்டத்துக்குத் தலைமை வகித்த நகர முதல்வர் திரு. எஸ். நாகராஜா தமது தலைசியம் என்றும் தெரிவித்தார்.

ஸ்தானிகர் திரு. பும்பெல் தொடர்ந்து பேசியதாவது:

இந்நாட்டு மக்கள் மத்தியில் ஜெர்மன் குடியரசு பற்றிய பேரார்வமும், நட்பும் இருக்கின்றதென்பதை இங்கு வந்த குறுகிய காலத்துள் நான் அறிந்து கொண்டேன். இரண்டாவதாக உலக சமாதானத்திற்கு உழைக்கும் உணர்வு இரண்டு நாடுகளுக்கிடையேயும் ஏற்பட்டுள்ளது.

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் வெளிநாட்டுச் சேவையில் ஹிட்லர் போன்றவர்கள் இப்போது இல்லையென்று குறிப்பிட்ட திரு. பும்பெல் தொழிலாளர்களையும், விவசாயிகளையும் கொண்ட ஒரு சமூகத்தை ஏற்படுத்தி வாழக்கூடிய சூழ்நிலை இப்போ

பரிசுபெறும்100டிக்கட்இலக்கங்கள் வருமாறு:

| | |
|---|---|
| 12 Q 0210 | 32 B 0048 |
| 31 A 0376 | 13 J 0020 |
| 34 J 0872 | 17 F 0495 |
| 09 D 0011 | 02 E 0597 |
| 30 Z 0416 | 02 X 0565 |
| 36 N 0017 | 09 D 0003 |
| 06 T 0210 | 25 N 0205 |
| 10 [illegible] 0451 | 19 V 0007 |
| 05 L 0685 | 38 B 0275 |
| 28 O 0137 | 25 E 0714 |
| 20 O 0593 | 16 C 0565 |
| 15 J 09[illegible]2 | 01 K 0481 |
| 25 O 0776 | 31 W 0578 |
| 21 N 0521 | 13 Z 0206 |
| 27 O 0176 | 29 S 0355 |
| 16 G 0040 | 13 R 0532 |
| 33 W 0873 | 36 S 0188 |
| 32 W 0332 | 02 K 0086 |
| 23 J 0871 | 32 O 0863 |
| 34 N 0215 | 09 N 0870 |
| 22 Y 0362 | 13 O 0503 |
| 04 Z 0138 | 13 A 0439 |
| 08 D 0228 | 41 O 0027 |
| 37 X 0669 | 29 K 0685 |
| 13 S 0953 | 35 K 0737 |
| 05 O 0801 | 44 C 0596 |
| 17 H 0574 | 35 R 0673 |
| 34 S 0115 | 39 S 0229 |

| | |
|---|---|
| 41 K 0647 | 24 P 0544 |
| 40 L 0395 | 24 Y 0761 |
| 13 E 0854 | 10 M 0760 |
| 28 T 0335 | 32 Q 0671 |
| 28 H 0622 | 34 S 0925 |
| 42 U 0604 | 10 X 0331 |
| 13 N 0710 | 35 P 0339 |
| 13 F 0669 | 17 X 0963 |
| 22 R 0997 | 13 B 0091 |
| 14 Z 0465 | 40 F 0170 |
| 28 B 0040 | 39 [illegible] 0611 |

(இவை உறுதிப்படுத்தப்படவேண்டும்)

## மணியோடருக்கு நேர்ந்த கதி

கோப்பாய், சனி

1968ம் ஆண்டு டிசம்பர் மாதம் கண்டியிலிருந்து கோப்பாயிலுள்ள ஒருவருக்கு அனுப்பிவைக்கப்பட்ட ''மணியோடர்'' ஒன்று இதுவரை கோப்பாய் தபாற்கந்தோருக்கு வந்து சேரவில்லையெனவும் குறிப்பிட்ட விலாசதாரருக்கு அப் பணம் கிடைக்கவில்லையாம்.

## தமிழ் ஆசிரியர்களிடம் வித்தியாதிபதி கேட்ட கேள்வி

யாழ்ப்பாணம், ஞாயிறு

நான் கல்வி இலாகாவில் கடமையாற்றத்தொடங்கும் போது முதல் ம்தர ஆங்கில பரிசோதகராக பதவி ஏற்றேன் ஆனால் இப்போது தமிழ் வித்தியாதிபதியாக கடமையாற்றுகின்றேன். இதனால் எனது தரம் குறைந்து விட்டதா?

நூற்றுக்கணக்கான தமிழ் ஆசிரியர்களைப் பார்த்து வடபகுதி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் இவ்வாறு கேட்டார்.

கல்லூரிகளைத் தரம்பிரித்த பின்னர் தமிழ் ஆசிரியர்கள் 7-ம் வகுப்புகளுக்குக் கீழுள்ள கனிஷ்ட பாடசாலைகளில் பாடம்கற்பிக்க விடப்படுவதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கையிலேயே இவர் இவ்வாறு கேட்டார்.

அகில இலங்கை தமிழாசிரியர் சங்க வருடாந்தக் கூட்டத்தில் பேசிய திரு. தணிகாசலம் மற்றொரு சந்தர்ப்பத்தில் யாராவது ஆசிரியர்களுக்குத்தான் ஏதாவது உதவி செய்தால் அதே ஆசிரியர்கள்தான் அடுத்த நாள் 'தணிகாசலம் ஒழிக' என்ற சுலோகத்துடன் ஊர்வலத்தின் முன்னால்செல்கிறார்கள் என்றுசொன்ன போது ஆசிரியர்கள் அனைவரும் சிரித்தனர். (கா. நி.)


[illegible]ந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு

டொலர் அலுமினியம்

ONE-DOLLAR


விலக்கி புதிய தலைவர் ஒருவரைத் தெரிவு செய்வதற்காக அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தைக் கூட்டவேண்டும் என்று திருமதி இந்திரா காந்தியின் கோஷ்டியினர் விடுத்திருக்கும் கோரிக்கை ஒழுங்கற்றதென இன்று காலையில் காங்கிரஸ் கட்சி கட்டிடத்தில் நடைபெற்ற கட்சியின் காரியக்கமிட்டி முடிவு செய்தது.

திரு நிஜலிங்கப்பா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தியும் அவரை ஆதரிக்கும் காரியக் கமிட்டி அங்கத்தவர்களும் கலந்து கொள்ளவில்லை.

திரு. நிஜலிங்கப்பா தலைமையில் நடந்த கூட்டத்தில் பத்துப்பேர் கலந்து கொண்டார்கள் மீதி பதினொரு பேரும் திருமதி காந்தி இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

திரு நிஜலிங்கப்பாவும் மற்றத் தலைவர்களும் காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்துக்காக காங்கிரஸ் கட்டிடத்துக்கு வந்தபொழுது காங்கிரஸ் கொடியேந்திய மக்கள் கூட்டமொன்று திரு நிஜலிங்கப்பாவுக்கு எதிராகவும் திருமதி காந்திக்கு ஆதரவாகவும் கோஷமிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தியது, இவர்களைக் கட்டுப்படுத்துவது பொலிசாருக்கு பெரும்பாடாகவிருந்தது திரு நிஜலிங்கப்பாவும் மற்றவர்களும் கூட்டத்தினரால் முரடடுத்தனமாக நடத்தப்பட்டதாக திரு நிஜலிங்கப்பா பின்னர் கூறினார்.

திரு சுப்பிரமணியத்தையும் திரு பக்ருதீன் அலிஅகமத்தையும்காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தவர்கள் அல்லவென்று திரு நிஜலிங்கப்பா கடந்த இரவு அறிவித்ததைத்தொடர்ந்து பிரதமமந்திரி திருமதி இந்திரா காந்தியின்கோஷ்டியினர் இன்று காலை நடைபெற்ற காரியக் கமிட்டிக் கூட்டத்தை பகிஷ்கரித்தனர் காங்கிரஸ் கட்டிடத்தில்திரு நிஜலிங்கப்பா தலைமையில் காரியக் கமிட்டிக் கூட்டம் ஆரம்பமான அதே சமயம் திருமதி காந்தியின் தலைமையில் அவரது இல்லத்தில் இன்னொரு கூட்டம் நடைபெற்றது.

## 'ஈழநாடு' விழா

தமிழர் திருநாளாம் தீபாவளித்திருநாளில் யாழ். கோட்டை மைதானத்தில் நடைபெறவிருக்கும்—

'ஈழநாடு' கலைவிழா

சம்பந்தமான விபரங்கள் 2-ம் பக்கத்தில் வெளியாகியுள்ளன.

## காரியக் கமிட்டியின் குழு கூட்டத்தை நடத்துக

திருமதி காந்தியின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில் காரியக் கமிட்டியின் முழுக் கூட்டத்தையும் கூட்டும்படி திரு நிஜலிங்கப்பாவைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது, காரியக் கமிட்டியிலிருந்து திரு சி சுப்பிரமணியத்தையும் திரு பக்ருதீன் அலி அகமத்தையும் விலக்கும் முடிவைமாற்றிக கொள்ளும்படியும் இந்தக் கூட்டத்தில் காங்கிரஸ் தலைவரை கேட்டுக் கொள்ளும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அகில இந்தியகாங்கிரஸ் கமிட்டியின் கூட்டத்தை மிகவிரைவில் கூட்டவேண்டும் என்று வற்புறுத்தும் தீர்மானம் ஒன்றும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது

பிரதமர் வீட்டில் நடைபெற்ற கூட்டத்தில் திருவாளர்கள் சவான், சுப்பிரமணியம், வி. பி. நாயக், சுக்காடியா, பிரம்மானந்த ரெட்டி, தீச்சித், பக்ருதீன், அல அகமத் திருஏபிரகாம், போன்ற காரியகமிட்டி உறுப்பினர்களுடன் திரு குல்சாரிலால் நந்தா போன்ற முக்கிய பிரமுகர்களுமாக 25 பேர் கலந்து கொண்டார்கள் கேரளக் காங்கிரசைச் சேர்ந்த திரு ஏபிரகாம் சுமார் ஒரு மணி நேரம் இருந்துவிட்டு வெளியேறினார் காரியக்கமிட்டிக் கூட்டத்துக்குப் போவதாக அவர் நிருபர்களிடம் கூறினார் நான் ஒரு காங்கிரஸ் கட்சிக்காரன், ஒற்றுமையை வற்புறுத்துவதற்காக இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டேன் என்று அவர் கூறினார்

## ஆர்ப்பாட்ட சம்பவம் திருமதி காந்தி கவலை

திரு நிஜலிங்கப்பாவும் மற்ற தலைவர்களும் காங்கிரஸ் காரியக்கமிட்டிக் கூட்டத்துக்கு வந்தபொழுது நடைபெற்ற ஆர்ப்பாட்ட சம்பவங்கள் குறித்து திருமதி காந்தி கவலை தெரிவித்திருக்கிறார் நமக்குள் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம் ஆனால் பண்புகள் மாறக்கூடாது என்றும் இந்தநிகழ்ச்சிக்காக தாம் வருந்துவதாகவும் திரு நிஜலிங்கப்பாவுக்கு தெரிவித்துள்ளார். திருவாளர்கள் காமராஜ் அதுல்யாகோஷ், பாட்டீல், மொரார்ஜி தேசாய், ராம் சுபாத்சிங் போன்ற தலைவர்கள் திரு நிஜலிங்கப்பாவுடன்கூட்டத்துக்கு வந்தார்கள்.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியைக் கூட்டவேண்டும் என்று கோருவது ஒழுங்கற்றது என்றுகாரியக்கமிட்டி தீர்மானித்ததாக காங்கிரஸ் பொதுக்காரியதரிசி திரு. சாதிக்அலி பின்னர் நிருபர்களிடம் கூறினார். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தை டிசம்பர்மாதம் பிற்பகுதியில் கூட்டுவதெனறும் முடிவெடுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டான்

பொதுவான அரசியல் பொருளாதாரப் பிரச்னைகள் பற்றியும் கமிட்டி ஆராய்ந்ததாக அவர் குறிப்பிட்டார்.

### பிரதமர் கருத்து

காங்கிரஸ் கட்சியில் ஏற்படக்கூடிய பிளவு தவிர்க்க முடியாதது அல்லவென்று திருமதி காந்தி நிருபர்களிடம் பின்னர் கூறினார். புதிய

அச்சுதமேனன் முதல் மந்திரியாகப் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

## 30,000 பேர் பயிற்சி பெற்றனர்

கோட்டை, சனி

சிறுகைத்தொழில் இலாகாவின் குடிசைக் கைத்தொழில் பயிற்சித் திட்டத்தின்கீழ் 30,000 இளைஞர்கள பயிற்சி பெற்றுள்ளார்கள

நல்ல குடிசைக் கைத்தொழில்களில் இளைஞர்களுக்குப் பயிற்சியளித்து அவர்களை வீட்டில் இருக்கும் நேரங்களில் இத்தொழில்களில் ஈடுபடச்செய்தலே மேற்படி திட்டத்தின் நோக்கமாகும்.

இரவு யாழ்ப்பாணத்தில் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி குடியரசின் யாழ்ப்பாணக் கிளை அங்குரார்ப்பணக் கூட்டம் யாழ். மலாயா கபே மேல்மாடியில் நடைபெற்றது.

கூட்டத்துக்குத் தலைமை வகித்த நகர முதல்வர் திரு. எஸ். நாகராஜா தமது தலைமையுரையில், சோஷலிஸ நாடாக இல்லாதுவிட்டால் எந்த நாடும் உரிமை பெற முடியாதென்றும், அது சுதந்திர நாடாக இருக்கமுடியாதென்றும்இந்தியாசோஷலிச நடாகவிருந்தும் அது சில கட்டுக் கோப்புக்குள்ளிருப்பதாலேயே அதன் வளர்ச்சி குன்றியிருப்பதாகவும் குறிப்பிட்டதோடு, இரண்டு நாடுகளின் உறவுகளைப் பலப்படுத்த நாட்டு மக்களுக்கிடையே ஒற்றுமை அவ

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் வெளிநாட்டுச் சேவையில் ஹிட்லர் போன்றவர்கள் இப்போது இல்லையென்று குறிப்பிட்ட திரு. பும்பெல் தொழிலாளர்களையும், விவசாயிகளையும் கொண்ட ஒரு சமூகத்தை ஏற்படுத்தி வாழக்கூடிய சூழ்நிலை இப்போது ஏற்பட்டுவருவதாகவும் சொன்னார்.

பின்வரும் இரண்டு தீர்மானங்களும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன:

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசை ஒரு முழுச் சுதந்திரம்பெற்ற நாடாக ஏற்று அதனுடன் பூரணமான ராஜதந்திர தொடர்பை ஏற்படுத்துமாறு பிரதமரையும் அரசாங்கத்தையும் கேட்டு[illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணம் மாநகரசபைபற்றி மேயர் கூறிய தகவல்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண மாநகர சபையில் மீண்டும் பதவி ஏற்றல், இறக்கல் ஏற்படுமா என்ற சந்தேகம் வரியிறுப்பாளர்கள் மத்தியில் நிலவி வரும் இவ்வேளையில் அதற்குமேலும் அதிர்ச்சி கொடுக்கக்கூடிய ஒருபதிலை நகரமுதல்வர் திரு. எஸ் நாகராசா நேற்று பகிரங்கமாக வெளியிட்டார். யாழ்ப்பாண மாநகரசபையில் அரசியல் ஐக்கியம் உண்மையில் நிலவுகின்றதா என்பதற்கான பதிலை இன்னும் ஒருசில மாதங்களுக்குள் அறியக்கூடியதாக இருக்கும் என்று திரு. எஸ். நாகராசா இங்கு வெளிப்படையாகத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் 22வது வருடாந்தக் கூட்டத்தில் சிறப்புரை நிகழ்த்துகையிலேயே, இவ்வதிர்ச்சி தரும் செய்தியை திரு. நாகராசா வெளியிட்டார்.

வடமாகாண தமிழாசிரியர் சங்கத்தலைவர் பண்டிதர் பொன்னுத்துரை பேசுகையில் யாழ்ப்பாண மாநகரசபையில் நிலவிவந்த பதவிமோகமும், ஆதிக்கப் போட்டியும், பதவி ஏற்றல் இறக்கமும் தமிழினத்தையே உலக அரங்கில் தலைகுனியச் செய்து வந்ததாகவும் ஆனால் இன்றைய நகரமுதல்வர் அதற்கு ஒரு முடிவுகட்டி அரசியல் கட்சிகளுக்குள்ளேயே ஐக்கியத்தை ஏற்படுத்தி விட்டார்என்றும்புகழ்மாலை சூட்டினார்.

இதற்குப் பதிலளித்துப் பேசுகையிலேயே யாழ்ப்பாண மாநகரசபையில் முதன்மையான அரசியல் ஐக்கியம் ஏற்பட்டுள்ளதா என்பதற்கான பதிலை இன்னும் ஒரு சில மாதங்களுக்குள் மக்கள் அறியக்கூடும் என்று நகரமுதல்வர் திரு. எஸ். நாகராசா நூற்றுக் கணக்கான ஆசிரியர்கள் மத்தியில் தெரிவித்தார்.

இவருக்குஅடுத்ததாக வடபகுதி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் பேசுகையில் வடபகுதியில் புதிய கல்வி அலுவலகம் ஒன்றைக் கட்ட அரசாங்கம் இரண்டு லட்சம் ரூபா வழங்கியுள்ளதாகவும், இதற்குக்கூடிய உதவிபுரிந்தவர்யாழ்ப்பாண நகரமுதல்வர்தான் என்றும், அவர் இன்னமும் அநேககாலம் நகரமுதல்வராகப் பணிபுரியவேண்டுமென்றுதான் விரும்புவதாகவும் சொன்னார்.

அகில இலங்கைத்தமிழாசிரியர் சங்கத் தலைவரான திரு. இ. கந்தையா தமது தலைமையுரையில் திருவாளர்கள்: ஜி. ஜி. பொன்னம்பலம், எஸ். ஜே. வி. செல்வநாயகம், டாக்டர் என். எம். பெரேரா, கல்வியமைச்சர் திரு. இரியகொல முதல் பிரதமர் டட்லி சேனநாயக்கா வரை அனைவரும் செவிசாய்த்தது அகில இலங்கை தமிழாசிரியர் சங்கேகோரிக்கைகளுக்கே என்றும், சகல ஆசிரியசங்கங்களும் ஒன்றுபடல்வேண்டியது மிகமிக அவசியம் என்றும் குறிப்பிட்டார். பலாலி கனிஷ்ட பல்கலைக்கழக அதிபர் திரு. எஸ். கந்தசாமியும் சொற்பொழிவாற்றினர்.

கட்சி அமைக்கும் நோக்கம் ஏதும் தமக்கு இல்லையென்றும் அவர் குறிப்பிட்டார்.

அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியைக் கூட்டவேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்ட மகஜரில் உள்ள சில கையெழுத்துக்கள்போலியானவையென்று திரு பாட்டில் கூறினார்.

காரியக்கமிட்டி நாளை மீண்டும் கூடி இதர விஷயங்கள் குறித்து ஆலோசிக்கும். இன்று காரியக் கமிட்டிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பற்றி இன்று மாலையே திருமதிகாந்தியின் குழுவினர் மீண்டும் கூடி ஆலோசனைகள் நடத்தவிருக்கிறார்கள்

(முன்வந்தசெய்தி3-ம்பக்கம்

## விலைகள் குறைக்கப் படலாம்

கோட்டை, சனி

நத்தார், புதுவருடப் பண்டிகையையொட்டி உள்நாட்டு உற்பத்திப் பொருள்கள் யாவற்றினதும் விலைகள் குறைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மந்திரிசபை உபகுழு கறுப்புச் சந்தைக்காரர்களிடமிருந்து மக்களை காப்பாற்ற மேற்படி தீர்மானத்திற்கு வந்துள்ளது. இக்குழு மேற்படி விலைக்கட்டுப்பாடு சம்பந்தமாக உள்ளூர் உற்பத்தியாளர்களின் தரவுகளைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு ஆராய்ந்துவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### தேவை

தேவன்ஸ் தயாரிப்புகள் தயார் செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. நேரில் வரவும். தேவன்ஸ் இன்டஸ்றீஸ், 51, மானிப்பாய் றேட், யாழ்ப்பாணம். 1517

### விற்பனைக்கு

காணி

ஒவ்வொன்றும் இரண்டு பரப்பாகவுள்ள, கட்டடங்களுக்கான காணித்துண்டுகள் நல்லூர் கிழக்கு வைமன் வீதியில் விற்பனைக்குண்டு. நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கருகாமையில், குடியிருப்புப் பகுதியில் வீதிக்கு முன்னால் இக் காணிகள் உண்டு. ஒரு பரப்பு ரூபா 16,000/- விண்ணப்பிக்கவும்: தர்மலிங்கம், 41, கண்டி வீதி சுண்டிக்குளி அல்லது புரக்டர் சுப்பிரமணியம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 1518

முட்டை இடும் பல இனக் கோழிகளும், நாலு மாதக் குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. 112, அரசடி வீதி, கந்தர்மடம். 1521

கிரமமாக முட்டை இடுகின்ற ''லெக்கோன்'' கோழிகள் விற்பனைக்குண்டு. நேரில் வரவும். 14/2 கோயில் வீதி, 1-ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 1519

இரண்டு மூன்று நாட்கள் பாவித்த வலைப்பந்து (Volley Ball) விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். முகாமையாளர், ''ஈழநாடு'', த. பெ. இல. 49, யாழ்ப்பாணம். 1520

## நாவலர் நூல்

சுழிபுரம், சனி

வட்டுக்கோட்டை தமிழ் சங்கத்தினர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சம்பந்தமாக ஓர் நூல் வெளியிடவுள்ளனர். இந் நூலை பண்டிதை பொ.பாக்கியம் எழுதியுள்ளார். இம்மாத பிற்பகுதியில் வெளியீட்டு விழா நடைபெறும்.

## புதிய கூட்டம்

கோப்பாய், சனி

கோப்பாய் கிராம சபை அலுவலகத்தின் புதிய கட்டடத்துக்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்று வருகின்றன. மிகவிரைவில் இக் கட்டடத்தை அமைப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்படி கி.ச. தலைவர் திரு. தி. பரமானந்தராசா மேற்கொண்டுள்ளார்.


**ஸ்ரீ காலிங்கா**
இணுவில்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
எம் ஜி ஆர் - ஜெயலலிதா
நடித்த
**கன்னித்தாய்**

**வெஸ்லி சினிமா**
மானிப்பாய்
தினசரி, 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா
நடித்த
**முகராசி**

**வின்ஸர்**
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
எம் ஜி ஆர்-பத்மினி
நடித்த
**அரசிளங்குமரி**

வல்வெட்டித்துறை
**றஞ்சனா தியேட்டர்**
தினசரி 2-30 6-30, 9-30.
சுந்தரராஜன். - பத்மினி
பேபிராணி
நடித்த
**குழந்தைக்காக**

**REGAL** JAFFNA
Daily 4 Shows
Anthony Quinn,
Claudia Cardinale
in
LOST COMMAND
(Adults)

**MANOHARA**
JAFFNA
Daily 4-45, 7-00&9-45pm
Jack Nicholoson
in
TERROR
(color-Scope)

**ராஜா** — யாழ்ப்பாணம்
தினசரி பிற்பகல் 2-30, மாலை 6-30, இரவு 9-45 மணி
போயா முன்தினம், போயா தினம், விடுமுறை தினம் காலை 10-30 மணி
* ஜெய்சங்கர் * விஜயகுமாரி
முத்துராமன், வாணிஸ்ரீ, எஸ். ஆர். ஜானகி
நாகேஷ் - பாலையா - எஸ். என். லட்சுமி
நடித்த


# இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 17-ந் திகதி (2-11-69)

**சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை**

**மேஷம்**- வியாபாரத்துறையில் துரிதமுன்னேற்றம், புதுத்துறைகளில் மனம்நாடுதல், பயன்தரும். பிரயாணம், நண்பர்களின் ஆதரவு இவற்றுடன் தெய்வத்தின் துணையும் உண்டு. சுபதினம்.

**ரிஷபம்**- பொதுத்துறையில் நாட்டம் செல்லும். மக்களின் ஆதரவு கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்குப் பெருகும். பெரியஇடத்துத் தொடர்பு மூலம் புதிய பாதையும் திறக்கும்.

**மிதுனம்**- தொழில்புரியும் இடத்தில் கருத்துவேற்றுமைகள் தோன்றக்கூடும். கொடுக்கல்வாங்கல்மூலம் எதிரிகளைத் தேடிக்கொள்வீர்கள். பொருள்விடயத்தில் கவனம் செலுத்தவும்.

**கடகம்**- பிரயாணத்தில் பொருள் நழுவக்கூடும். திருடர் பயத்துக்கும் இடமுண்டு. விவசாயிகள் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும். காணிப் பிணக்கும் கவலையைத் தரலாம்

**சிம்மம்**- திடீர்வரவுகளுக்கும் இடமுண்டு. வாழ்க்கையிலும் நல்ல திருப்பம் ஏற்படும். பேச்சுவன்மையின் மூலம் பெரிய இடத்து ஆதரவைத் தேடிக்கொள்ளுவீர்கள். குடும்பத்திலும் சுவையான நிகழ்ச்சிகள் உண்டு.

**கன்னி**- சுறுசுறுப்பு குன்றும். உமது சொந்த வாழ்க்கையில் மற்றவர்கள் தலையிடுவார்கள். குடும்பத்தில் சிறு பூசல் தோன்றிமறையும். கொள்கையில் கோணலுடன் கோபமும் அதிகரிக்கும். அமைதி நன்று.

**துலாம்**- தாய்வழியால் பெருமைகள் சேரும். தனத்துடன் வாழ்வும் கிடைக்கும். எதிரிகள் கூட உங்களை வரவேற்பார்கள். மருத்துவத்துறையில் ஈடுபடுபவர்களுக்கு இன்று மகத்தான தினம்.

**விருச்சிகம்**- வட்டிக்கடை வைத்திருப்பவர்களுக்கு அது மேலும் குட்டிபோடும். பண விவகாரங்கள் மகிழ்சியை அளிக்கும். புத்திரர் ஒருவரின் வெளிநாட்டுப் பயணத்துக்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**தனுசு**- இதயம் எரிமலையாகும். எதிரிகள் தாக்குவர். ஏமாற்றத்துக்கும் இடம் உண்டு. எனினும் இருள் சூழ்ந்தநிலையிலும் ஒளிக்கோடுகள் தென்படலாம் அதிக பேச்சைத் தவிர்த்து காரியத்தில் கண் வைக்கவும்.

**மகரம்**- களஸ்திரவழியால் நன்மைகள் வந்து சேரும். குடும்பத்தில் தென்றல் வீசும். கவர்ச்சிகரமான நிகழ்ச்சிகளை ரசிப்பதில் காலத்தைக் கடத்துவீர்கள். செலவினங்கள் கட்டுப்படியாகவே இருக்கும்.

**கும்பம்**- போட்டாபோட்டிகளில் ஈடுபடுவதன் மூலம் பணம் பாழாகலாம். முகமன்கூறுவோர் விடயத்தில் எச்சரிக்கையாக இருக்கவும். விவசாயிகளாயின் இன்று கடன்படநேரிடலாம்

**மீனம்**- பூமியால் இலாபமுண்டு. புத்திரர் புகழும் சேரும். பொதுசனத் தலைமைக்கான வாய்ப்பும் கிடைக்கும். உடல்நலம் பாதிக்கக்கூடுமாகையால் வாய்வுப்பதார்த்தங்களை நீக்கிக்கொள்ளவும்.

## வட்டு. வட்டாரப் பாடசாலை போட்டி முடிவுகள்

சுழிபுரம், சனி

வட்டுக்கோட்டை வட்டாரப் பாடசாலைகளின் பேச்சு கட்டுரைப் போட்டிகள் சுழிபுரம் விக்டோரியாக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. போட்டி அமைப்பாளராக வட்டாரக் கல்வி அதிகாரி திரு. கே. குமாரசாமி கடமையாற்றினார். போட்டி முடிவுகள் வருமாறு:

**தமிழ்ப் பேச்சு**

கீழ்ப்பிரிவு (ஆண் - கே செந்தில்நாதன் (சுழிபுரம் விக்டோரியா), எஸ். பிரேமச்சந்திரன் (காரைநகர்

## குளம் உடைந்தது; பிரயாணிகள் அவதி

முசலி, சனி

யாழ்ப்பாணம் - மன்னார் பஸ் சேவையில் பறைய நாகங் குளத்துக் கப்பால், ஒரு குளம் உடைந்திருப்பதன் காரணத்தினால் பஸ் சேவை வவுனியா ஊடாக நடைபெறுவதால் மதவாச்சியைச் சுற்றி செல்லவேண்டியுள்ளதாம். இதனால்

## நெல்லியடி பலாலியை வென்றது

பருத்தித்துறை, சனி

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் நெல்லியடி கோஷ்டி 4: 1 கோல்களால் வெற்றியீட்டியது.

இடைவேளைவரை நெல்லியடிக் கோஷ்டி பலமாகத் தாக்குதலை நடத்திவந்த போதிலும், ஒருதரப்பும் கோல்போடவில்லை. இடைவேளையின் பின்னர் ஒருசில நிமிடங்களில் பலாலிக் கோஷ்டி ஒரு கோல் போட்டது. கடைசி ஐந்து நிமிட நேரப் பகுதியில் நெல்லியடிக் கோஷ்டியைச் சேர்ந்த கே. ஸ்ரீதரனும், முருகும் தலா இரண்டு கோல்களைப் போட்டு, பலாலி ஆசிரியர் கோஷ்டியைத் தோற்கடித்தனர்

இப்போட்டிக்கு திரு எஸ். தர்மராஜா மத்தியஸ்தம் வகித்தார்.

## வேலணை வெற்றி

அல்லைப்பிட்டி, சனி

வேலணை மத்திய கல்லூரி 'பி' பிரிவு கோஷ்டியினரும் காரைநகர் இந்துக் கல்லூரி 'பி' பிரிவு கோஷ்டியினருக்குமிடையே சிநேகபூர்வாக உதைபந்தாட்டப் போட்டியொன்று காரைநகர் இந்துக்கல்லூரி விளையாட்டுத் திடலில் நடைபெற்றது. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் வேலணைக் கோஷ்டியினர் 3—1 கோல்களால் காரைநகர் கோஷ்டியினரைத் தோற்கடித்தனர்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மூன்றும் பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டியினயினரும், வேலணை மத்திய கல்லூரி மூன்றும்பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டியினரும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போட்டியொன்றில் மோதிக்கொண்டனர். ஈற்றில் 1—0 கோல்களால் யாழ். கோஷ்டியினர் வேலணைக் கோஷ்டியினரை தோற்கடித்தனர்.

## கட்டுரைப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கைதடி இந்து வாலிபர் சங்க ஆறுவது சைவ மகாநாட்டை முன்னிட்டு நடாத்தப்பட்ட நாவலர் கட்டுரைப்போட்டி முடிவுகள்:

முதலாம் பரிசு: சைவப்

## தீபாவளித் திருநாளில் யாழ். நகரில் 'ஈழநாடு' விழா

# மனதுக்கினிய மாட்டுவண்டி சவாரிப் போட்டி கண்ணுக்கினிய கலை விழா

(ஈ. கே: ராஜகோபால்)

**தீபாவளித் திருநாளில் யாழ் நகர் பெருவிழா காணப்போகிறது! நாலாபக்கத்திலிருந்தும் திரண்டுவரப்போகும் மக்கள் வெள்ளத்தை 'ஈழநாடு' மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தப்போகிறது.**

**மக்கள் உள்ளங்களையெல்லாம் துள்ளவைக்கும் யாழ்ப்பாணத்து மாடுகளின் மானெனத் துள்ளியோடும் சாகசப் பாய்ச்சலை தீபாவளித் திருநாளாம் 9-ம் திகதி மாலை யாழ் கோட்டை மைதானத்தில் காணத் தயாராகுங்கள்.**

நடனமும், நாடகமும் நாட்டுக்கூத்தும், நகைச்சுவையும், தேனொழுகும் மெல்லிசையும், மெல்லியரின் பல்வகை நிகழ்ச்சிகளும் அன்று இரவு யாழ் திறந்தவெளியரங்கில் உங்களுக்காக 'ஈழநாடு' அளிக்கிறது. கண்டுகளித்திடப் பலகண் வேண்டுமென பார்த்தபின் சொல்லப் போகிறீர்கள்.

நெஞ்சங்களைக் குளிரவைத்துஇன்பப் பூரிப்பில்ஆழ்த்தப்போகும் 'ஈழநாடு' பெருவிழா காணும் நாள் இன்னும் வெகுதூரத்திலில்லை. இன்னும் ஒன்பது நாட்கள் தான் இருக்கின்றன.

மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி இரு பிரிவுகளாக நடைபெறும். 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு என இருபிரிவுகளாகப்பிரிக்கப்பட்டு இந்தப்போட்டி நடைபெறும். (விண்ணப்பப்பத்திரத்தில் பங்குபற்றும் பிரிவு எனக்குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் 'ஏ' அல்லது 'பி' எனக்குறிப்பிடுக)

தீபாவளித் தினத்தன்று மக்கள் தமது பொழுதை நல்ல படியாகச் செலவழிப்பதற்கு வகை செய்யும் முகமாக யாழ். பொலிசார் 'ஈழநாடு' விழாவுக்கு மிகுந்த ஒத்துழைப்பை அளிக்க முன்வந்துள்ளார்கள்.

'ஈழநாடு' ஆதரவுடன் இந்த மாபெரும் விழாவுக்கான ஒழுங்குகளை வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டன்ட்திரு. ஆர். சுந்தரலிங்கம், யாழ். மெட்டல்இன்டஸ்றீஸ் திரு. ஆர். ஆர். ராஜலிங்கம், தலைமைக் காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு எஸ். மாணிக்கம், ஸ்டீல்சன்ஸ் அதிபர்திரு. எம். பூபாலசிங்கம், யாழ்மாநகரசபை என்ஜினியர்திரு ஈ. வைத்திலிங்கம், சமூகசேவைப்பகுதிஅதிகாரி திரு என் சிவசிதம்பரம், 'ஈழநாடு' ஸ்தாபனத்தைச்சேர்ந்த திரு. எஸ். எம். கோபாலரத்தினம் ஆகியோர் கவனித்துவருகின்றனர்.

யானை பீடிக்கம்பனி அதிபரான செனட்டர் ரி. நீதிராஜா மாட்டுவண்டிச் சவாரியில் வெற்றியீட்டுபவர்களுக்கான பரிசில்களை வழங்க முன்வந்துள்ளார். போட்டிவிழா பற்றிய முழுவிபரங்கள் விண்ணப்பப்பத்திரத்துடன்தொடர்ந்து ஈழநாட்டில் வெளிவரும்.

**மாட்டுவண்டில் சவாரியில் கலந்துகொள்பவர்கள் கீழுள்ள விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்து இம்மாதம் 6-ம் திகதிமாலை 4 மணிக்கு முன்னர் திரு எஸ். மாணிக்கம் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர், பொலிஸ் நிலையம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.**

போட்டியில் பங்குபற்றக்கூடிய தகுதியை நான் அத்தாட்சிப் படுத்துவதுடன் இப்போட்டியில் பங்குபற்றுவதனால் எனக்கோ எனது உடைமைக்கோ ஏற்படும் காயம் அல்லது சேதங்களுக்கு நானே பொறுப்பாளி என்பதையும் ஏற்றுக்கொள்கிறேன் எனக்கேற்படக்கூடிய காயம் அல்லது நஷ்டத்துக்கு போட்டி நிர்வாகிகளிடமிருந்தோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளிடமிருந்தோ அவர்களிடமிருந்தோ அல்லது நியமிக்கப்பட்ட எந்த அதிகாரிகளிடமிருந்தோ எதுவித நஷ்ட ஈடும் கோரமாட்டேன் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

போட்டியாளரின் பெயர்: ..............................

..............................

பங்குபற்றும் பிரிவு: ..............................

விலாசம்: ..............................

..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜா — யாழ்ப்பாணம்
தினசரி பிற்பகல் 2-30, மாலை 6-30, இரவு 9-45 மணி
போயா முன்தினம், போயா தினம், விடுமுறை தினம்
காலை 10-30 மணி
* ஜெய்சங்கர் * விஜயகுமாரி
முத்துராமன், வாணிஸ்ரீ, எஸ். ஆர். ஜானகி
நாகேஷ் - பாலையா - எஸ். என். லட்சுமி
நடித்த
டீச்சரம்மா

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
சிவாஜி—நிர்மலா
சௌகார் ஜானகி
நடித்த
லக்ஷ்மி கல்யாணம்

வெற்றிமுரசு கொட்டும் 2-வது வாரம்

கிங்ஸ்லி
(கொழும்பு)
பிளாஸா
(வெள்ளவத்தை)

வெலிங்டன்
[யாழ். நகர்]
தினசரி 2-30, 6-30, 9-30, போயா, பிரிபோயா 4 காட்சிகள்



★ ரவிச்சந்திரன்,
★ பத்மினி,
★ நாகேஷ்,
★ குமாரிசச்சு,
மற்றும் பலர் நடித்த
எங்களுக்கும் காலம்வரும்

கதைவசனம்: பாசுமணி
டைரக்ஷன்: வின்ஸன்ட்
பாடல்கள்: கண்ணதாசன் - வாலி

றது. போட்டி அமைப்பாளராக வட்டாரக் கல்வி அதிகாரி திரு. கே. குமாரசாமி கடமையாற்றினார். போட்டி முடிவுகள் வருமாறு:

**தமிழ்ப் பேச்சு**

கீழ்ப்பிரிவு (ஆண்)- கே. செந்தில்நாதன் (சுழிபுரம் விக்டோரியா), எஸ். பிரேமச்சந்திரன் (காரைநகர் யாழ்டன்), பி. அருமநாயகன் (பண்ணாகம் மெய்கண்டான்)

(பெண்)- எஸ். இராசேஸ்வரி(பண்டத்தரிப்புமகளிர்), எம். ரெறென்சியா (சில்லாலை றோமன்), எஸ். பூமணி (பண்டத்தரிப்பு இந்து).

மேற்பிரிவு (ஆண்)- எம். பாலசுப்பிரமணியம் (பண்ணாகம் மெய்கண்டான்), பி. சோதீஸ்வரன் (காரைநகர் இந்து), கே. தணிகாசலம் (அராலி முருகமூர்த்தி).

(பெண்)- ரி. வசந்தகுமாரி பண்டத்தரிப்பு மகளிர்), எஸ். இராசநாயகி (பண்ணாகம் மெய்கண்டான்), எஸ். சகுந்தலா (சுழிபுரம் விக்டோரியா).

**ஆங்கிலப் பேச்சு**

கீழ்ப்பிரிவு (ஆண்)- எஸ். கேசவநாதன் (சுழிபுரம் விக்டோரியா), ரி. சந்திரகாந்தன் (அராலி மேற்கு வள்ளியம்மை), எஸ். பழனிமலை (காரைநகர் கிழக்கு அ. மெ. ப.)

(பெண்)- ஆர். சாந்தகுமாரி (பண்டத்தரிப்பு மகளிர்), வி.சாரதாமணி(காரைநகர் இந்து), எம். வசந்திரதேவி(அராலிவள்ளியம்மை)

மேற்பிரிவு (ஆண்)- வி. கிரிசரன் (சுழிபுரம் விக்டோரியா).

மேற்பிரிவு (பெண்)- ஆர். சாந்தகுமாரி (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணகல்லூரி) எஸ். நீற்ரூ (பண்டத்தரிப்பு மகளிர்).

**கட்டுரைப் போட்டி**

(தமிழ்)

ரி. வசந்தகுமாரி (பண்டத்தரிப்பு மகளிர்), பி. சிவஞானம் (காரைநகர் இந்து) எஸ். சிந்தாதேவி (சுழிபுரம் விக்டோரியா)

முசலி, சனி

யாழ்ப்பாணம் - மன்னார் பஸ் சேவையில் பறையநாகங் குளத்துக் கப்பால், ஒரு குளம் உடைந்திருப்பதன் காரணத்தினால் பஸ் சேவை வவுனியா ஊடாக நடைபெறுமல் மதவாச்சியைச் சுற்றி செல்ல வேண்டியுள்ளதாம். இதனால் பிரயாணிகள் அதிகநேரத்தைச் செலவழிப்பதுடன் பணச் செலவையும் செய்ய வேண்டியிருக்கின்றது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### சனி 2—11—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கத்தோலிக் கநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 41 மீ.

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00 திரைகானம், 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 படத்திலிருந்து.

இரவு6-15இசைப்பயிற்சி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கர்நாடகஇசை, 7-35 விளையாட்டு, 7-45 வாத்திய இசை, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 செய்தித்திரட்டு, 9-45 நாதஸ்வரம், 10-30 செய்திச்சுருக்கம்.

## கட்டுரைப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கைதடி இந்து வாலிபர் சங்க ஆறுவது சைவ மகாநாட்டை முன்னிட்டு நடாத்தப்பட்ட நாவலர் கட்டுரைப்போட்டி முடிவுகள்:

முதலாம் பரிசு: சைவப் புலவர் அ. செகசோதியம்மா, இரண்டாம் பரிசு: செல்வன் க. இராசதுரை மூன்றும்பரிசு: செல்வி சு நாகரத்தினம் (கா-நி)

......

3-ம் பக்கத் தொடர்ச்சி

கூறப்படுகின்றது. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் 708 பேர் இருக்கிறார்கள்.

திரு லகுகுண இரவுசுமார் 1-30 மணிக்கு திரு நிஜலிங்கப்பா வீட்டுக்குப் போனார். அப்பொழுது திரு நிஜலிங்கப்பா உறங்கிக்கொண்டிருந்தார் அதனால் காங்கிரஸ் பொதுக்காரியதரிசி திரு சாதிக் அலியைச் சந்தித்து மகஜரைக் கையளித்தார் காரியக்கமிட்டிக் கூட்டத்தில் மகஜரை சமர்ப்பிப்பதாக அவர் திரு லகுகுணவிடம் தெரிவித்தார்.

**பம்பாய் காங்கிரஸ்**

பம்பாய் காங்கிரஸ் கட்சிக் கமிட்டியைச் சேர்ந்த சுமார் 250 அங்கத்தவர்கள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியை விரைவில் கூட்டும்படி திரு நிஜலிங்கப்பாவுக்கு மகஜர் அனுப்பியிருக்கிறார்கள்.

## உடுவில் விளையாட்டுக்கழக உதைபந்தாட்டப் போட்டி

உடுவில், சனி

வலி வடக்கு உடுவில் தொகுதி விளையாட்டுக்கழகத்தின் உதைபந்தாட்டப் போட்டிகள் இம்மாதம் 10-ம் திகதி முதல் அடுத்த மாதம் 25-ம் திகதிவரை நடைபெறவிருக்கின்றன.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கும் இப்போட்டிகள் 'ஏ', 'பி' 'சி' ஆகிய மூன்று பிரிவுகளுக்கிடையில் அகில இலங்கை உதைபந்தாட்டசங்க விதிகளுக்கமைய நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது.

'ஏ' பிரிவில் 20 வயதுக்கு மேற்பட்டோரும், 'பி' பிரிவில் 17 வயதுக்கு மேற்பட்டோரும், 'சி' பிரிவில் 13 வயதுக்கு மேற்பட்டோரும் பங்குபற்றலாம். இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 5 ம் திகதிக்கு முன் செயலாளர் வலி வடக்கு உடுவில்விளையாட்டு சங்கம்மான்ஸ்கூல் வீதி, சுன்னாகம்என்றமுகவரிக்கு அனுப்பிவைக்கவேண்டுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

உடுவில் தொகுதியில் இச்சங்கத்தின் பிரிவில் வசிப்பவர்கள்மட்டும் இப்போட்டிகளில் பங்குபற்றலாம்.

'ஏ' பிரிவு சாம்பியன் கோஷ்டிக்கு வல்லிபுரம் வெற்றிக்கிண்ணமும் 'பி' பிரிவு சாம்பியன் கோஷ்டிக்கு இரத்தினம் வெற்றிக்கிண்ணமும் 'சி' பிரிவு சாமபியன் கோஷ்டிககு தம்பிராசா வெற்றிக்கிண்ணமும் வழங்கப்படும்.

பங்குபற்றும் பிரிவு: ..............................

விலாசம்: ..............................

..............................

வயது: ..............................

மேற்கூறிய தகவல்கள் சரியானவை எனஉறுதிப்படுத்துகிறேன்.

.............................. ..............................
திகதி போட்டியாளரின் கையொப்பம்

கோட்டை, வியா.

முஸ்லிம்களின் நோன்புக் காலமான புனித ரம்ழான் மாதத்தில் வெள்ளைமில் சாட் அரிசியும் மற்றும், உணவுப் பொருட்களும் போதிய அளவில் வழங்கப்படவேண்டுமென அகில இலங்கை மலாய் பெண்கள் சங்கம் உணவு அமைச்சருக்கும் கோரிக்கை விடுத்திருக்கிறது.

## மாணவரை பஸ் கண்டக்டர் தாக்கினராம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

பஸ்ஸுக்காகக் காத்து நின்று பஸ்ஸில் ஏறிய பாடசாலை மாணவன் ஒருவர் பஸ் கண்டக்டரினால் தாக்கப்பட்டதாகப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. புங்குடுதீவிலிருந்து யாழ்ப்பாணம்நோக்கிவந்துகொண்டிருந்த இ. போ. ச. பஸ்ஸில் வேலணை வங்களாவடியில் இச்சம்பவம் நடைபெற்றதாம்.

பஸ் கண்டக்டர் செருப்பு அணிந்திருந்த காலினால் மாணவனை உதைத்துக் கீழே வீழ்த்தியதாகக் கூறப்படுகிறது காயமுற்ற யாழ்ப்பாண இந்துக்கல்லூரியைச் சேர்ந்த மாணவரான சி. சிவராசா என்பவர் ஊர்காவற்றுறைப் பொலிஸில் செய்துள்ள புகார்ரில் பஸ் கண்டக்டர் தம்மைத்தாக்கி தாக்கிவிட்டுஉடனேபஸ்ஸில் சென்றுவிட்டதாகத் தெரிவித்துள்ளார். இது பற்றி இ. போ. ச. முகாமையாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. கண்டக்டரின் செருப்பும் பொலிஸில் காண்பிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. (அல்லை மண் நிருபர்)

## உயர் பட்டதாரிகளுக்கே பட்டமளிப்பு

வத்தேகம, சனி

எம். ஏ. கலாநிதி பட்டதாரிகளுக்கே எதிர்வரும் டிசம்பர் மாதம் பட்டமளிப்பு விழா நடாத்தப்படுமென பேராதனைப்பல்கலைக்கழக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இனிமேல் வருங்காலத்தில் இத்தகைய உயர் பட்டம் பெற்றவர்களுக்கே பட்டமளிப்புவிழா நடாத்துவதாகவும் பல்கலைக்கழக அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்

பொறியியல், வைத்தியம், விஞ்ஞானம், விவசாயம், கலைப்பிரிவுகளில் சித்தியடைந்த 4000 பட்டதாரிகளுக்கு தபால்மூலம் பட்டங்களை வழங்குவதற்கான ஆயத்தங்களை உபவேந்தர் மேற்கொண்டுள்ளார் கடந்த இருவருடங்களாக இப்பட்டங்கள் வழங்கப்படாமல் இருப்பதாகத் தெரிகிறது

மைலன்ட்ஸ்
115, 117, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 7092
தீபாவளி மலிவு விற்பனை
23-10-69 தொடக்கம் 9-11-69 முடிய
உங்கள் அதிஷ்டத்தை எதிர்பாருங்கள்.
சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.
இனும்! 1-ம் பரிசு ரூ. 500
இனும்! 2-ம் பரிசு ரூ. 250
இனும்! 3-ம் பரிசு ரூ. 100
ரூபா 50 க்கும் அதற்கு மேலும் ஜவுளி வாங்குபவர்கட்குக் கிடைக்கும். பரிசு பில் இலக்கம் 25-11-69 'ஈழநாடு' தினசரியில் அறிவிக்கப்படும்.
1803

நீடித்து உழைக்கக்கூடிய கவர்ச்சிகரமான கலர்களில்
றெயின் கோட்டுகள்
(Rain Coats)
எமது கைவசமுண்டு.
அளவு. 24''—42''
ரூ. 6—50க்கு மேல்
தேவைக்கு முந்துங்கள்
டயரும்ஸ்
54, 60, மெயின்வீதி — யாழ்ப்பாணம்.

S. R. S.
ஜவுளி மாளிகையில்
தீபாவளி மலிவுவிற்பனை!
★ விசேஷ ரக மணிப்புரி சாறிகள்
★ ஜரிகை பாடர் பாவாடை துண்டுகள்
★ பிரிண்டட் நைலக்ஸ் சாறிகள்
★ பிளேன் & பிரின்டெட் நைலக்ஸ்
★ சோளி புடவைகள்
★ சூட்டிங்ஸ், சேட்டிங் றெடிமேட் வகைகள்
மற்றும்
புதுரக புடவை வகைகளும்
ஏராளமாக வரவழைத்துள்ளோம்.
இன்றே விஜயம் செய்யுங்கள்!
எஸ் ஆர். செல்லத்துரை
216, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கிரஸ்காரியக்கமிட்டிகூட்டத்தை இந்திரா குழு பகிஷ்கரித்தது

## நிஜலிங்கப்பா எடுத்ததிடீர் நடவடிக்கை எதிரொலி

புதுடில்லி, நவ.1

காங்கிரஸ் காரியக்கமிட்டிக் கூட்டத்தை பிரதமர் இந்திராகாந்தியும் அவரது சகாக்களும் இன்று பகிஷ்காரம் செய்தார்கள். காங்கிரஸ் தலைவர் திரு. நிஜலிங்கப்பா நேற்றிரவு எடுத்த திடீர் நடவடிக்கையைத் தொடர்ந்து பிரதமர் குழுவினர் இந்த முடிவுக்கு வந்தனர்.

நேற்றிரவு முழுவதும் தலைநகரில் பெரிய பரபரப்பான சூழ்நிலையே இருந்து வந்தது. திடீர் திருப்பங்கள் அரசியல் அவதானிகளை திக்குமுக்காடச் செய்தன.

இன்று காலையில் பிரதமர் குழுவினர் தனியாகவும் காங்கிரஸ் தலைவர் திரு நிஜலிங்கய்பாவின் குழுவினர் தனியாகவும் கூட்டங்கள் நடத்தினர்கள்

காங்கிரஸ் கட்சியில் கடந்த பல மாதங்களாக உருவகிவந்த கருத்து வேற்றுமைகள் நேற்றிரவு உச்சக் கட்டத்தையடைந்தன கடைசி நிமிடத்தில் இரு தரப்பினருக்குமிடையில் சமரசம் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இரு கோஷ்டித் தலைவர்களுமே ஒருவரையொருவர் சந்தித்துப் பேச முன்வர மறுத்துவிட்டார்கள்.

நேற்றிரவு தலைவர் நிஜலிங்கப்பா திரு பக்ருதீன் அலி அகமத்தையம் திரு. சி. சுப்பிரமணியத்தையும் காங்கிரஸ் காரியக் கமிட்டியிலிருந்து நீக்கி விட்டதாக அறிவித்ததைத் தொடர்ந்து பிரதமர் கோஷ்டியினர் காரியக்கமிட்டிக் கூட்டத்தைப் பகிஷ்கரிக்க முடிவு செய்தனர்.

காங்கிரஸ் தலைவரின் நடவடிக்கை காங்கிரஸ் கட்சி அமைப்பு விதிகளுக்கு முரணனது என்றும் அதனல் காரியக் கமிட்டிக் கூட்டமும் கட்சிவிதிகளுக்கு அமைய நடைபெறவில்லையென்றும் பிரதமர்குழுவினர் அறிவித்துள்ளனர்.

### நிஜலிங்கப்பா கடிதம்

...கும் காங்கிரஸ்காரியக் கமிட்டிக் கூட்டத்தில் அவர்கள் கலந்து கொள்ள முடியாது என்பது குறித்து தாக்கீதுகளை அனுப்பிவைத்தார்.

காரியக் கமிட்டியின் நியமன அங்கத்தவரான திரு பக்ருதீன் அலி அகமத்திற்கு அவர் அனுப்பிய கடிதத்தில் தமது நம்பிக்கைக்கு அவர் பாத்திரமாக இல்லாததால் அவரது அங்கத்துவப் பதவியை ரத்துச் செய்வதாக திரு நிஜலிங்கப்பா அறிவித்திருக்கிறார்.

ஜனதிபதி தேர்தலின் போது திரு அகமத் கட்சி வேட்பாளருக்கெதிராக வேலை செய்தார் என்றும் கட்சித் தலைமைக்கு எதிராகப் பிரசாரத்தில் ஈடுபட்டதாகவும் கையெழுத்து சேகரிப்பதில் ஈடுபட்டுள்ளதாகவும் திரு நிஜலிங்கப்பா குற்றஞ்சாட்டியுருக்கிறார்.

திரு. சுப்பிரமணியத்துக்கு காங்கிரஸ் கட்சித் தலைவர் அனுப்பிய கடிதத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித்தலைவர் பதவியை ராஜிமை செய்ததால் காரியக் கமிட்டியில் அங்கம் வகிப்பதற்கான ஆதாரத் தகுதியை அவர் இழந்து விட்டதாகத் தெரிவித்திருக்கிறார்.

### பிரதமர் வீட்டில்



சகாக்களுடன் ஆலோசனைகள் நடத்தினர் இன்றுகாலை 9 மணிக்கு காரியக் கமிட்டி கூட்டத்தை பகிஷ்கரித்து மீண்டும் வீட்டிலேயே ஆலோசனைகள் நடத்துவதென்று முடிவு செய்தனர்

நேற்றிரவு பிரதம மந்திரியின் சார்பில் திரு பகுகுண காங்கிரஸ் தலைவர் திரு நிஜலிங்கப்பா வீட்டுக்குச்சென்று காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவர் ஒருவரைத் தெரிவு செய்யும் விதத்தில் டிசம்பர் மாதத்துக்கு முன் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியைக் கூட்டும்படி கோரும் அறிக்கையை சமர்ப்பிக்க முயற்சி செய்தார். இந்த அறிக்கை...

# இந்திராவைத் துரத்த 'சின்டிகேட்' முடிவு

திருமதி இந்திரா காந்தியைப் பிரதமர் பதவிலிருந்து விலக்கிவிடவும் அமைச்சர்கள் சவான், ஜெகஜீவன் ராம், பக்ருதீன் அலிஅகமது ஆகியோரைக் காங்கிரஸ் உறுப்பினர் பதவியில் இருந்து விலக்கி விடுவது என்றும் 'சின்டி'கேட் தலைவர்கள் தீர்மானித்து இருப்பதாகக் கூறப்படுகின்றது. டில்லியில் கூடிப் பேசிய இச் சிண்டிகேட் தலைவர்க்ள் புதிய பிரதமரைத் தெரிவு செய்யவும் முடிவு செய்து நவம்பர் 17-ல் கூடும் பாராளுமன்றக் கூட்டத்திற்கு முன பாராளுமன்ற காங்கிரஸ் உறுப்பினர்கள் கூடிப் புதியதலைவரைதெரிவு செய்ய ஏற்பாடு செய்வது எனவும் தீர்மானித்துள்ளனராம்.

இவற்றைத் தொடர்ந்து நிஜலிங்கப்பா இந்திராவுக்கு ஒருகடிதம் அனுப்பியுள்ளார் ஜனதிபதித் தேர்தலில் இந்திரா கட்சிக்கட்டுப்பாட்டை மீறினரெனவும் கட்சியைப் பிளவு படுத்தும் விதத்தில் இந்திராவும் அவரது ஆதரவாளர்களும் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் அக்கடிதத்தில் நிஜலிங்கப்பா குற்றம் சாட்டியுள்ளார்.

இந்திரா சிண்டிக்கேட் மோதல் எவ்வாறிருப்பினும் மக்கள் இம் மோதலில் இந்திராகாந்தியை ஆதரிக்கிறார்கள் எனத் தெரிகிறது.

காங்கிரஸ் கட்சியினுள் நடைபெறும் மோதல் சம்பந்தமாகச் சஞ்சீவையா கருத்துத் தெரிவிக்கையில் வடநட்டு மக்களுக்கும் தென்னுட்டு மக்களுக்கும் இடையே விரோதம் உண்டாக்குவதற்குச் சில பெரிய காங்கிரஸ்தலைவர்கள்முயற்சி செய்கிறார்கள் எனத் தெரிவிததுள்ளார்.

அவர் மேலும் . கருத்துத் தெரிவிக்கையில்:- பிரதமர் இந்திராகாந்தி இப்போது மக்ளுடையே ஒரு உற்சாகத்தையும், புத்துணர்சியையும் உண்டாக்கியிருக்கிறார் இந்திரா மூலமாக மக்கள் ஒளிமயமான எதிர்காலத்தைப் பார்க்கிறார்கள். இந்த தேசம் முழுவதும் இந்திரா காந்திக்குப் பின்னல் நிற்கிறது எனக் குறிப்பிட்டார்

# தென் ஆபிரிக்காவின் அலட்சியப்போக்கு

## ஐ. நா. மகாசபை கண்டனம்

நியூயோர்க், நவம். 1

ஐ நா. தீர்மானங்களுக்கு மதிப்பு அளிக்க தென்னபிரிக்கா மறுத்து வருவதை ஐ. நா. மகாசபை வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

வடமேற்கு ஆஸியாவிவிலுள்ள தனது காலனிகளை தென்ஆபிரிக்கா கைவிட்டு வெளியேறவேண்டுமென்று ஐ நா. நிறைவேற்றிய தீர்மானத்தை தென்ன...

பிரிட்டன், அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆதியவை உட்பட 7 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

## பாகவதர் மகனுக்கு திருமணம்

## எல்லைக் காந்திக் ரூ. 10 லட்சம் அன்பளிப்பு

கல்கத்தா, நவம்பர் 1

இந்தியாவில் 3 மாதகாலம் சுற்றுப்பிரயாணம் செய்து வரும் எல்லைக்காந்தி கான் அப்துல் கபார்கானுக்கு ரூபா 10 லட்சம் அன்பளிப்பாக வழச்கப்படவிருக்கிறது இத்தொகையை அவர் கல்கத்தாவடும்பொழுதுமேற்கு வங்காள முதல் மந்திரி அஜாப் முகர்ஜி மூலம் வழங்க, இங்குள்ள எல்லைக் காந்தி நினைவுக்குழு முடிவு செய்திருக்கிறது.

## ராஜசுலோசன கால் முறிந்தது

ராஜமுந்திரி (ஆந்திரா), நவம்பர் 1

ராஜமுந்திரியின் நவராத்திரிவிழாவையொட்டி நடைபெற்ற நடனநிகழ்ச்சியின் போது தமது குழுவினரோடு நடனமாடிய சினிமா நடிகை ராஜசுலோசன கால்தவறி மேடையில் இருந்துகீழே விழுந்ததால் அவரதுகால் ஒன்று முறிந்துள்ளது.

உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டார்.

## கருணநிதிக்கு மயக்கம்

திருச்சி, நவ. 1

கடந்த சில நாட்களாக காரிலும் புகைவண்டியிலும் ஓயாத சுற்றுப் பிரயாணத்தை மேற்கொண்டதன் காரணமாக முதல்வர் கருணநிதிக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டது.

தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் மூலம் இங்கு வந்த கருணநிதி தமக்கு மயக்கம் வருவதாகக் கூறவே மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் திருவேங்கடம் இவரது உடலைப் பரிசோதனை செய்து ஓய்வெடுக்கும்படி தெரிவித்தார். அதையடுத்து டாக்டரது ஆலோசனையின்படி முதல்வர் கருணநிதி ஒரு நாள் ஓய்வெடுத்தபின் தமது சுற்றுப் பிரயாணத்தைத் தொடர்ந்தார்.

## எல்லைக்காந்தி திறந்தவெளியில்

## 'வன்னி நாட்டு ஒளிவிளக்கு'

### மறைந்த கல்வி அதிகாரிக்கு வவனியா எம். பி. புகழ்அஞ்சலி

முல்லைதீவு, சனி

தனக்கென வாழாப் பிறர்க்கென வாழ்ந்த பெருமகன் மறைந்த திரு. கந்தையாவை வவனியாத் தொகுதி மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள். மறந்தால் நாம் நன்றி கெட்டவர்களாவோம். திரு. கந்தையா ஓமந்தை மகாவித்தியாலயத்தின் அதிபராக வந்தபோது மகாவித்தியாலயம் என்ற பெயருடன் மட்டும் விளங்கிய பாடசாலையை வவனியாத் தொகுதியில் முதன்மை பெறச் செய்து பெருமைப் பெறச் செய்தார். அவர் இப்பகுதி மக்களின் உள்ளத்தில் இடம்பெற்றது மட்டுமல்ல பிள்ளைகளின் கல்விக்காகவும் தன் முழு நேரத்தையும் செலவிட்டார். 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் முல்லைத்தீவு வட்டாரக் கல்வி அதிகாரியாகப் பதவியேற்ற நாள் முதல் தன் கடமைகளைத் திறப்படச் செய்தார். வவனியா மாவட்டத்தின் கல்வி வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்களில் முதலி'ம் பெற்றவர் நண்பர் கந்தையா. 'வன்னி மக்களின் நீங்காத ஒளி விளக்காய் என்றும் பிரகாசிப்பார் அவர்.

முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற முல்லைத்தீவு வட்டார ஆசிரியர் சங்கத்தினல் ஏற்பாடு செய்யப்பட்ட காலஞ்சென்ற முல்லைத்தீவு வட்டாரக் கல்வி அதிகாரி திரு. கந்தையாவின் நினைவுதின விழாவில் பேசும்போது வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## 'கேதீஸ்வரம், கோணேஸ்வரம் புனித நகர்களாக்க வேண்டும்'

யாழ்ப்பாணம், ஞாயிறு

திக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகிய இரண்டு பாடல்பெற்ற சைவஸ்தலங்களையும் புனித நகராக்குவதோடு, இந்துஆலய பரிபாலன மசோதாவை உடனடியாக செயல்படுத்துமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வதென்ற தீர்மானங்கள் கைதடி சைவ மகாநாட்டில் நிறைவேற்றப்படவிருக்கின்றன.

கைதடி இந்துவாலிபர் சங்கத்தின் சைவ மாநாடு இம் மாதம் 14-ம் திகதி நடைபெற விருக்கின்றது.

இலங்கைப்பல்கலைக்கழகத்தில் இந்துசமயம் போதிக்க சகலவசதிகளும் செய்யப்பட வேண்டுமெனக் கல்வி அமைச்சைக் கோரும் தீர்மானமொன்றும் இங்கு முக்கியமாக நிறைவேற்றப்படவிருக்கின்றது.

மாநாட்டில்கொண்டுவரப் படவிருக்கும் சில முக்கிய தீர்மானங்கள் பின்வருமாறு

இந்து சமயவிவகார ஒதுக்கீட்டுத் தொகையை அதிகரிக்க வேண்டும்.

சைவ அரசாங்க ஊழியர்களுக்கு வெள்ளிக்கிழமைகளில் இரண்டு மணித்தியால சிறப்பு வீடுமுறை வழங்க வேண்டும்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் நினைவு முத்திரைகளை வெளியிடுமாறு வேண்டிக் கொள்வது.

மகா சிவராத்திரிவிழாவை...

## தி.மு.க.மேயருக்கு காங்கிரஸ் பிரமுகர் பாராட்டு

சென்னை, நவ 1

'எமது மேயர் நாராயணன் தமது பதவிக்காலத்தில் பல நல்ல திட்டங்களைக் கொண்டுவந்து செயற்படுத்தியிருக்கிறார். அவருடைய பதவிக்காலத்தை இன்னுமோராண்டு நீடித்தால் அதை நாங்கள் மனப்பூர்வமாக வரவேற்போம்.

இவ்வாறு சென்னை மாநகராட்சிக் கூட்டத்தில் தமது பதவிக்காலம்முடிந்து விடைபெற்ற சென்னை மேயர் வேலூர் நாராயணனைப் பாராட்டிப் பேசுகையில் காங்கிரஸ் கட்சித்தற்காலிக தலைவர் நாராயணபிள்ளை குறிப்பிட்டார். அவர் தமதுரையில் துணைமேயர் கோவிந்தசாமியையுப் பாராட்டத்தவறவில்லை.

தி, மு. க. தற்காலிகத் தலைவர் கணேசன் பேசுகையில், திரு. நாராயணன் ஒரு சட்டம் தெரிந்து பட்டதாரி. எதிர்க்கட்சியினருக்கும் மதிப்பளித்துப் பணிபுரிந்தார். டில்லியில் நடைபெற்ற மேயர்கள் மாநாட்டிற்கு அவர் தலைமைவகித்துச் சிறப்புற நடத்தியதை யாரும் மறக்கமுடியாது எனக் குறிப்பிட்டார்,

மாநகராட்சி ஆணையாள...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பு விதிகளுக்கு முரணானது என்றும் அதனால் காரியக் கமிட்டிக் கூட்டமும் கட்சிவிதிகளுக்கு அமைய நடைபெறவில்லையென்றும் பிரதமர்குழுவினர் அறிவித்துள்ளனர்.

### நிஜலிங்கப்பா கடிதம்

நேற்றிரவு சுமார் 10மணியளவில் திரு நிஜலிங்கப்பா யூனியன் மந்திரி திரு பக்ருதீன் அலி அகமத்துக்கும் திரு சி. சுப்பிரமணியத்துக் காங்கிரஸ் கட்சித் தலைவர் அனுப்பிய கடிதத்தில் தமிழ் நாடு காங்கிரஸ் கட்சித்தலைவர் பதவியை ராஜிமைா செய்ததால் காரியக் கமிட்டியில் அங்கம் வகிப்பதற்கான ஆதாரத் தகுதியை அவர் இழந்து விட்டதாகத் தெரிவித்திருக்கிறார்.

### பிரதமர் வீட்டில் கூட்டம்

திரு நிஜலிங்கப்பா வின் கடிதம் கிடைத்ததுடன் பிரதமர் தம் வீட்டில் அவரது காங்கிரஸ் தலைவர் திரு நிஜலிங்கப்பா வீட்டுக்குச்சென்று காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவர் ஒருவரைத் தெரிவு செய்யும் விதத்தில் டிசம்பர் மாதத்துக்கு முன் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியைக் கூட்டும்படி கோரும் அறிக்கையை சமர்ப்பிக்க முயற்சி செய்தார். இந்த அறிக்கையில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் சுமார் 400 அங்கத்தவர்கள் கையெழுத்திட்டிருப்பதாகக்

2-ம் பக்கம் பார்க்க)

# லெபனுன் நெருக்கடி பற்றி வல்லரசுகள் ஆலோசனை

## மாஸ்கோ வெளியிட்ட தகவல்

மாஸ்கோ நவம்பர் 1

மேற்காசிய நெருக்கடிக்கு விரைவில் சுமூகமான தீர்வு காணப்படவேண்டும் என்று சோவியத் யூனியன் கருத்து வெளியிட்டிருக்கின்றது. மேற்காசிய நெருக்கடியைத் தீர்த்துவைக்க வல்லரசுகள் தீர்க்கமான நடவடிக்கைகளில் அவசரமாக இறங்க வேண்டும் என்றும் சோவியத் யூனியன் வற்புறுத்தியிருக்கின்றது.

லெபனுனில் ஏற்பட்டுள்ள சுகராறுகள் குறித்தும் வல்லரசு நாடுகள் தங்களுக்குள் தொடர்பு கொண்டிருப்பதாக மாஸ்கோவில் ஒரு அதிகாரி கூறினர். இந்தத் தொடர்பு எங்கே எப்படி இடம்பெறுகிறது என்பது பற்றி அவர் கூறவில்லை.

லெபனுன் நெருக்கடியை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அரபு நாடுகள் தங்களுக்குள் முயற்சி மேற்கொண்டிருப்பதையும் சோவியத் யூனியன் வரவேற்றிருக்கின்றது.

கெய்ரோவிலும் பெய்ருட்டிலும் சமரசமுயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதே வேளையில் லெபனுனில் அரசுபடைகளுக்கும் பாலஸ்தீன கொமாண்டோக்களுக்குமிடையில் தொடர்ந்து சண்டை நடைபெற்று வருகின்றது லெபனுன்படைகளுக்கும் கொமாண்டோக்களுக்குமிடையில் இடம் பெற்ற பலத்த சண்டையில் 12 கொரில்லாக்கள் மரணமானதாகவும் 40 பேர் காயமடைந்ததாகவும் அரபு விடுதலை இயக்கமான 'அல் பட்டா' அறிவித்தது. அரசாங்கப்படைகளுக்கும் பலத்த சேதத்தைத் தாங்கள் ஏற்படுத்தியதாக அவர்கள் அறிவித்தனர்.

### ஈராக் துணைப்பிரதமர்

ஈராக் துணைப் பிரதமர் ஜெனரல் அமாஷ் பெய்ருட் வந்து லெபனுன் அதிபர் ஹேலேயுடன் ஆலோசனைகள் நடத்தினர். சமரசம் ஏற்படும் என்பதில் அதிபர் ஹெலே நம்பிக்கை கொண்டிருப்பதாக ஜெனரல் அமாஷ், பின்னர்பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

ஜெனரல் அமாஷ் கெய்ரோவில் அதிபர் நாஸரோடும் லெபனுன் ராணுவத் தளபதி ஜெனரல் புஸ்தானியோடும் தனித்தனியே ஆலோசனைகள் நடத்திவிட்டு பெய்ருட் வந்திருக்கிறார்.

லெபனுன் ராணுவத் தளபதி ஜெனரல் புஸ்தான் கெய்ரோவில் அதிபர் நாஸரோடும், இதர தலைவர்களோடும் தொடர்ந்து ஆலோசனைகள் நடத்தி வருகின்றார்.

### பிரி. மந்திரி இஸ்ரேல் பயணம்

பிரிட்டிஷ் மந்திரி திரு. தொம்ஸன் இஸ்ரேலுக்கு பிரயாணம் மேற்கொள்கின்றார் அங்கு அரசியல் தலைவர்களைச் சந்தித்து நிலைமைகளை நேரில் தெரிந்துகொள்வதின்மூலம் வல்லரசுஆலோசனைகளின்போது தாக்கல் செய்வதற்கு தகவல்களை அவர் சேகரிப்பார் என்று கூறப்படுகின்றது. ஏற்கனவே அவர் அரபுநாடுகளுக்கும் விஜயம் செய்திருக்கின்றார்.

# ஜாவர் சீதாராமனின் பூதவுடல் தகனம்

## எம். ஜி. ஆர். உட்பட நடிகர்கள் கவலை

சென்னை, நவம்பர் 1

தாம் புதிதாக எடுத்தஇந்திப்படத்தைத் தணிக்கைக் குழுவிற்கு அனுப்பிவிட்டு வடபழனி முருகன் கோவிலுக்குச் சென்றுகொண்டிருக்கையில் மாரடைப்பு ஏற்பட்டுக் காலமான பிரபல சினிமா நடிகர் ஜாவர் சீதாராமனின்உடல் இவருடைய மூத்தமகன் தீமூட்ட நேற்று முன்தினம் தகனம் செய்யப்பட்டது.

ஏழைபடும்பாடு. சந்திரலேகா. வீரபாண்டிய கட்டபொம்மன் போன்ற எண்ணற்ற படங்களில் நடித்தவரும், வஞ்சம், ராமு போன்ற படங்களுக்கு கதைவசனம் எழுதியவரும் பிரபல நாவலாசிரியருமாகிய இவரின் இறுதிக்கிரியையில் ஏ. வி, எம். மெய்யப்பச் செட்டியார் போன்றபடாதிபதிகளும், நாகேஷ், சந்திரபாபு, சவுகார் ஜானகி போன்ற நடிகநடிகையரும் கலந்துகொண்டனர்.

திருமணத்தின் பொருட்டு திருச்சி சென்றிருந்த எம். ஜி ஆர். தனது அனுதாபச் செய்தியில் நல்ல பண்போடும் அன்போடும், ஆர்வத்தோடும் உற்சாகத்தோடும் கலைச்சேவை செய்த நண்பர் சீதாராமனின் மறைவு கலையுலகத்துக்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும் எனக் குறிப்பிட்டிருக்கிறார்'

வருவதை ஐ. நா. மகாசபை வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

வடமேற்கு ஆஸியாவிவிலுள்ள தனது காலனிகளை தென்ஆபிரிக்கா கைவிட்டு வெளியேறவேண்டும் என்று ஐ. நா. நிறைவேற்றிய தீர்மானத்தை தென்னுபிரிக்கா புறக்கணித்துவிட்டது. இதனைப் பல நாடுகள் கண்டித்துள்ளன.

தென்னுபிரிக்காவைக் கண்டிக்கும் தீர்மானத்தை நேற்று ஐ. நா. மகாசபையில் 95 நாடுகள் ஆதரித்தன. இந்தத் தீர்மானத்தை இரண்டு நாடுகள்மட்டுமே எதிர்த்து வாக்களித்தன.

# இணைப்பை எதிர்த்து உண்ணுவிரதம்

ஹைதராபாத், நவ 1

ஆந்திராவும் தெலிங்கானுவும் இணைந்த தினமான நவம்பர் 1-ம் தேதியிலிருந்து 11 தினங்களுக்கு உண்ணுவிரதத்தை கொண்டாலக்ஷ்மன் பாபுஜி மேற்கொண்டுள்ளார்.

இவர்தனது உண்ணுவிரத திட்டத்தின் 11 நோக்கங்களை ஒரு அறிக்கை மூலம் வெளியிட்டுள்ளார். ஆந்திராவும் தெலிங்கானுவும் இணையுமுன் அதாவது 1956 க்கு முன்னர் தெலிங்கானு மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதை தேசியத் தலைவர்கள் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின கவனத்திற்குக் கொண்டு வருவதும் தெலிங்கானு இயக்கத்தை யொடுக்க அரசு கையாளும் முறைகளை எதிர்ப்பதுமே உண்ணுவிரதத்தின் நோக்கமென கொண்டா லக்ஷ்மன் பாபுஜி தனதறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

வில்லை.

# பாகவதர் மகனுக்கு திருமணம்

திருச்சி, நவ. 1

காலம் சென்ற பிரபல சினிமா நடிகர் எம். கே. தியாகராஜ பாகவதரின் மகன் எம். கே. டி. ரவீந்திரனுக்கும், சேலம்சுந்தரம் ஆச்சாரியார் மகள் கவுசல்யாவுக்கும் அண்மையில் திருச்சியிலுள்ள சத்திரமொன்றில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. எம். ஜி. ஆர், ஜெயலலிதா, தங்கவேலு, நடிகர் திருச்சி சவுந்தரராஜன் உட்பட பல கலையுலகப்பிரமுகர்கள் இத் திருமணத்தில் பங்கு பற்றி மணமக்களை வாழத்தியதோடு வெள்ளிக் குத்துவிளக்கு போன்ற விலையுயர்ந்த பரிசுகளையும் வழங்கினர்.

சென்னையில்

# 50 பேர் கைது

சென்னை, நவம்பர் 1

சென்னையிலுள்ள மோட்டார் கம்பெனிக்கு முன்னல் ஆர்ப்பாட்டம் செய்யத் திட்டமிட்டு, ஊர்வலமாகச் சென்ற கம்பெனித் தொழிலாளர்கள் 50 பேர், பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

சென்ற 45 நாட்களாக வேலைநிறுத்தம், செய்து வரும் இவர்கள், தடை உத்தரவை மீறியதற்காகவே கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிஸ் கமிஷன் தெரிவிக்கிறார்.

# வலது கம். கட்சித்தலைமையில் கேரளத்தில் கூட்டாட்சி

## அச்சுதமேனன் முதல்வராகிறார்

திருவனந்தபுரம், நவ. 1

கேரளத்தில் வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் புதிய மந்திரிசபை அமைக்கப்படுகின்றது.

இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியின் மந்திரிசபை அண்மையில் சவிழ்க்கப்பட்டது தெரிந்ததே.

வலது கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. அச்சுதமேனன் புதிய மந்திரிசபை அமைக்கிறார். தமது மந்திரிசபையில் அங்கம்வகிக்கவிருக்கும் மந்திரிகளின் பெயர் பட்டியலை நேற்று திரு. அச்சுதமேனன் கேரள கவர்னர் திரு. விசுவநாதனிடம் சமர்ப்பித்திருந்தார் மந்திரிகள்பதவி ஏற்பு முடிந்ததும் முதலாவது மந்திரிசபைக்கூட்டத்தை நடத்தி மந்திரிகளின் பொறுப்புகள் பற்றி ஆலோசிக்கப்போவதாக அவர் கூறினர். காங்கிரஸ் கட்சியின் ஆதரவு கிடைக்காமல் போனுலும் சட்டசபையில் தமது கட்சிக்கு அதிக தெளிவான பெரும்பான்மையிருக்கும் என்று திரு. அச்சுதமேனன்

வலது கம்யூனிஸ்ட் கட்சி முஸ்லிம் லீக், பிரஜாசோஷலிஸ்ட், பாரத சோஷலிஸ்ட் கேரள காங்கிரஸ் ஆகிய கட்சிகள் புதிய அரசியல்அங்கம் வகிக்கின்றன.

கேரளத்தில் புதிதாக அமைக்கப்படும் அரசாங்கத்தை மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எதிர்க்கும் என்று மேற்கு வங்க துணை முதல்வர் திரு. ஜோதி பாசு தெரிவித்திருக்கிறார். காங்கிரஸ் ஆட்சியை விட இந்த அரசு மோசமானதாகவிருக்கும் என்றார் அவர்

சனையின்படி முதல்வர் கருணாநிதி ஒரு நாள் ஓய்வெடுத்தபின் தமது சுற்றுப் பிரயாணத்தைத் தொடர்ந்தார்.

# எல்லைக்காந்தி திறந்தவெளியில் உறக்கம்

பலான்பூர், நவ. 1

இங்கு வருகை தந்திருந்தஎல்லைக்காந்தி, இங்குள்ள அரசாங்க மாளிகையில் தனக்காக செய்யப்பட்டிருந்த ஆடம்பர ஏற்பாடுகளையெல்லாம் மறந்துவிட்டு மாளிகைக்குச் சொந்தமான புல்வெளியில் கட்டில் போட்டு உறங்கினர்.

இந்திய அரசாங்க விருந்தினர் ஒருவர் இவ்வாறு திறந்தவெளியில் உறங்குவது இதுவே முதற்தடவை' என்று இங்குள்ள மக்களால் பேசிக்கொள்ளப்படுகிறது.

# ஆர்ப்பாட்டம்

சென்னை, நவ. 1

காஞ்சிபுரத்திலிருந்து சென்னைக்கு வரும் புகைவண்டி தினமும் ஒருமணி நேரம் தாமதமாகி வருவதால் ஆத்திரமுற்ற பிரயாணிகள் பரனூர் புகைவண்டி நிலையத்தில் அபாயச்சங்கிலியைப் பிடித்திழுத்து நிறுத்தி ஆர்ப்பாட்டம் செய்தார்கள். ஒருசில பிரயாணிகள் தண்டவாளத்தின் முன்னல் உட்கார்ந்து மறியல்செய்தார்கள். இதையறிந்தசெங்கல்பட்டு கலெக்டர்போன்ற உயர்தர அதிகாரிகள் வந்து ஆவன செய்வதாக வாக்குறுதியளித்த பின்பே இவர்களது ஆர்ப்பாட்டமும் மறியலும் நின்றன.

களுக்கு வெள்ளிக்கிழமைகளில் இரண்டு மணித்தியால சிறப்பு வீடுமுறை வழங்க வேண்டும்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் நினைவு முத்திரைகளை வெளியிடுமாறு வேண்டிக் கொள்வது.

மகா சிவராத்திரிவிழாவை பகிரங்க விடுமுறையாக்குவதுடன் வர்த்தக விடுமுறையாகவும் ஆக்கவேண்டும்.

கைதடி இந்து வாலிபர் சங்கத்துக்கு அரசினர் வழங்கிய காணிக்குள் சைவ இளைஞர் அனுதை இல்லம் நிறுவ மான்யம் வழங்குமாறு கோருவது. (கா. நி)

# இந்தியா ஆட்சேபம்

புதுடில்லி, நவ. 1

அக்டோபர் 30-ந் திகதி நடபெற்ற சர்வதேச ஆட்மன்ற மகாநாட்டில் சர்வதேச ஆட்சிமன்ற யூனியன் பொதுக்காரியதரிசி இந்தியாவைப் பற்றிய அறிக்கையில் தெரிவித்துள்ள சில கருத்துக்களுக்கு ஆட்சேபனை தெரிவித்து வாக்குவாதம் நடைபெற்றது.

லோகசபையின் உதவி சபாநாயகர் திரு. ஆர். கே. காடில்கர் இந்தியாவைப் பற்றிய அறிக்கையில் சில ஆட்சேபகரமான பகுதிகள் இருப்பதாகவும் இவ்வாறே பெரும்பான்மையான இந்தியப் பிரதிநிதிகள் கருதுவதாகவும் மேற்படி மகாநாட்டில் குறிப்பிட்டார்.

இதற்கிடையில் சர்வதேச ஆட்சிமன்ற அதிகாரிகளில் சிலர் கடில்கரைச் சந்தித்து அவர் கூறியது சம்பந்தமாக விவாதித்ததோடு அறிக்கையில் இந்தியாவைப் பற்றியுள்ள ஆட்சேபனைக்குரிய பகுதிகளை அகற்றிவிடுவதாக உறுதி கூறியதாகத் தெரிகிறது.

இஸ்ரேல் தேர்தல்

# மெயருக்கு ஆதரவு குறைகிறது

டெல்அவிவ், நவ. 1

இஸ்ரேலிய பொதுத்தேர்தலில் முதலில் வந்த முடிவுகள், அரசாங்கக்கட்சியினர் பெரும்பான்மை வாக்குகளை பெறமுடியாதிருக்குமென்பதையே காட்டுகிறது.

கொல்டா மெயரின் அரசாங்கக்கட்சி, 120 ஆசனங்களில் 63 ஆசனங்களை மாத்திரமே பெற்றுள்ளது.

# நாவலர் விழா

கோப்பாய், சனி

போப்பாய் நாவலர் பாடசாலையில் இம்முறை நாவலர் விழாவைச் சிறப்பாக கொண்டாடுவதற்கு மேற்படி பாடசாலைப் பழைய மாணவர் சங்கம் ஏற்பாடுகள் செய்துவருகிறது.

ஒரு சட்டம் தெரிந்து பட்டதாரி. எதிர்க்கட்சியினருக்கும் மதிப்பளித்துப் பணிபுரிந்தார். டில்லியில் நடைபெற்ற மேயர்கள் மாநாட்டிற்கு அவர் தலைமைவகித்துச் சிறப்புற நடத்தியதை யாரும் மறக்கமுடியாது எனக் குறிப்பிட்டார்,

மாநகராட்சி ஆணையாளருட்பட மற்றும் பலர் மேயரதும் துணைமேயரதும் சேவைகளைப் பாராட்டிப் பேசினர்,

தமிழகத்தில்

# வள்ளுவர் தினத்தில் விடுமுறை

சென்னை, அக். 1

பொங்கலுக்கு மறுநாளை விடுமுறையாக்கி அந் நாளில் வள்ளுவர் தினத்தைக் கொண்டாட தமிழ் நாடு அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அண்மையில் முதல்வர் கருணாநிதிதலைமையில் நடைபெற்ற மந்திரிசபைக் கூட்டத்தில் இம் முடிவு எடுக்கப்பட்டது.

கண்காட்சிக்கு

# ரூபா 300,000 பெறுமதியான பொருட்கள்

கோட்டை, சனி

எமது உள்ளூர் நூதனப் பொருள்களை ஐக்கிய அமெரிக்காவிலுள்ள பல நகரங்களில் காட்சிக்குவைக்க நூதனசாலைகள் இலாகா தீர்மானித்துள்ளது.

இந்நாட்டின் கலாசாரத்தைப்பிறநாடுகளுக்குத்தெரியப்படுத்துவதற்கும், நாட்டின் உல்லாசப்பிரயாணத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்குமாகவே நூதனசாலைகள் இலாகா மேற்படி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

ரூபா 300,000 பெறுமதியான 79 நூதனப்பொருட்கள் அமெரிக்காவில் நடைபெறும் கண்காட்சிகளுக்கு அனுப்பிவைக்கப்படுமென நூதனசாலைகளின் அதிபர் திரு பி. ஏச். பி. டி. சில்வா தெரிவித்துள்ளார்.

# திருப்பணி

சுழிபுரம், சனி

பண்ணுகம் தெற்கு விசவத்தனை முருகமூர்த்தி கோவில் சுற்றுமதில், பூந்தோட்ட சுவர், திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

கோவில் திருப்பணிகள் நடைபெற கோவில் பிரதம குரு க. வைதீஸ்வரக்குருக்கள் முயற்சி மேற்கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாசகம்**

நான் செய்யமுடியாததை பிறரிடம் வற்புறுத்த விரும்பவில்லை. என் பரீட்சையில் சித்தியடைய முடியுமா என்று யோசனை செய்தபின்பே பிறரிடம் இதுபற்றி கூறுகின்றேன்.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஐப்பசி மாதம் 17-ந் திகதி (2-11-69)


## புதிய அரசாங்க ஊழியர்

திறைசேரியின் சுற்று நிருபங்களும் நிர்வாக ரீதியில் அரசாங்கம் மேற்கொள்ளும் பல நடவடிக்கைகளும் தமிழ்அரசாங்கசேவையில் சேர்ந்துள்ள தமிழ் ஊழியர்களுக்குத் தொல்லையும் துன்பமும் அளித்து வருவது மட்டுமல்லாது இந்த நாட்டில் தமிழர்கள் தன்மானத்துடன் வாழமுடியுமா என்ற துயரந்தோய்ந்த கேள்வியையும் தமிழ்மக்கள் மனதில் தோற்றுவித்திருக்கிறது.

சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டதும் அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்த காலஞ்சென்ற பிரதமர் திரு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகாவே, அந்தச் சட்டம் கொண்டுவரப்படுவதற்கு முன் அதாவது 1956-ம் ஆண்டுக்கு முன்னர் அரசாங்கசேவையில் சேர்ந்த அரசாங்க ஊழியர் பாதிக்கப்படமாட்டார்கள் என்று வாக்குறுதியளித்திருந்தார். இந்த வாக்குறுதியை அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்தவர்கள் முற்றுமுழுதாகக் காப்பாற்றவில்லை. ஆனாலும் இந்த அரசாங்கம் புதிய அரசாங்க ஊழியர் அதாவது 1956-ம் ஆண்டுக்குப் பின்னர் அரசாங்கசேவையில் சேர்ந்த ஊழியர் சிங்களத்தில் தேர்ச்சிபெறுவது சம்பந்தமாகக் கொடுத்த வாக்குறுதியைக் கூட சரிவர நிறைவேற்றமுடியாதிருப்பது தான் வேடிக்கை.

புதிய அரசாங்க ஊழியர் சிங்களத்தில் தேர்ச்சிபெறுவதற்கு இந்த அரசாங்கம் ஒரு காலஎல்லை கொடுத்திருந்தது. இக்கால எல்லைக்குள் புதிய அரசாங்க ஊழியர் பலர் சிங்களம் படித்துப் பரீட்சையும் எழுதி அதில் சித்தியடைந்துள்ளனர் குறிப்பிட்டகால எல்லைக்குள் சித்தியடையத் தவறிய ஊழியர்களும் கூட 1968-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலும் 1969-ம்ஆண்டு மார்ச் மாதத்திலும் நடந்த இரண்டு பரீட்சைகளிலும் நிருபத்தின்படி சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றவர்களும்கூட சேவை முதுமை அடிப்படையில் பதவிஉயர்வு பெறமுடியாது. இதுசம்பந்தமாக தமிழ்த் தலைவர்களும் சில தொழிற் சங்கங்களும் பிரதமரைச் சந்தித்துப் பேசுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

அரசாங்க சேவையில் சேர்ந்தவர்கள் உத்தியோக மொழியில் கடமையாற்ற வேண்டுமென்றும் இதற்காக அவர்கள் சிங்களத்தில் தேர்ச்சிபெறவேண்டுமென்றும் அரசாங்கம் வற்புறுத்தியது.

தமிழ்மூலம் படித்து தமிழ்மூலம் பரீட்சைக்கு எழுதி சேவையில் சேர்ந்தபின்னர் பலவித கஷ்டங்களுக்கிடையில் முற்றிலும் புதிய மொழியொன்றைப் படித்து அதில் தேர்ச்சியும் பெற்ற பின்னர் அந்த ஊழியர்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்டுவதென்றால் அதன் அர்த்தம் என்ன? தமிழர்களுக்கு அரசாங்க உத்தியோகம் இனிக் கிடையாது என்பதும் அப்படித்தான் உத்தியோகம் பார்த்தாலும் பதவிஉயர்வோ, உயர்தர உத்தியோகமோ கிடையாது என்பதுதானா?

ஒருபக்கம் சிங்களத்தைப் படியுங்கள் உத்தியோகம் கிடைக்கும் என்று கூறிக்கொண்டு மறுபக்கம் சிங்களம் படித்தாலும் உங்களுக்கு உய்வில்லை என்று அரசாங்கமே கூறுவதானால் இந்த நாட்டில் தேசிய ஐக்கியம் எப்படி ஏற்படமுடியும்? தமிழ்மக்கள் அரசாங்கத்துடன் தமது மொழியில் தொடர்புகொள்ளவும் தடை, தமிழ்மொழிச்சட்ட (விசேஷ) விதிகள் இயற்றியும் பயனில்லை, இந்நாட்டில் தமிழ் மக்கள் வாழவேண்டுமென்று பெரும்பான்மை இனத்தவர் விரும்புகிறார்களா என்று கேட்கக்கூடிய அளவுக்கு அரசாங்கமும் அரசியல் தலைவர்களும் நடந்துகொள்கிறார்கள். சிங்

# 'துலாக்குரு' நன்மை தருவாரா?

# ஐக்கிய அரசாங்கத்தை அமைக்க உதவுவார்

**நாளை குருபகவான் கன்னிராசியை விடுத்து துலாராசியை அடைகிறார். இதனால் ஏற்படும் மாற்றங்களை இக்கட்டுரை விபரிக்கிறது.**

**- நயினை ஐயாத்துரை சரவணபவன் -**

எல்லோரும் எப்போது குரு மாறுகிறார்? எங்களுக்கேதாவது நன்மையுண்டா? என வினவுகின்றனர். 3-11-69 ல் குருபகவான் கன்னி இராசியை விடுத்துத் துலா இராசியை அடைகிறார். துலா இராசி அசுர குருவாகிய சுக்கிரனுடையது. அதிற் தேவகுருவாகிய வியாழன் விருந்தினராகச் செல்வது நாட்டுக்கு நன்மை பயக்குமா? என்பது ஆராய்ச்சிக்குரியது.

எந்த நாடும் ஏதாவது ஒரு இராசியால் ஆளப்படுகின்றது, அந்த இராசிக்கு 1, 3, 6, 8, 10, 12-ல் வியாழன் சஞ்சரிக்கும்போது தீமைகளும் 5, 9 ல் செல்லும்போது அதி உன்னத பலன்களும் 2, 4, 7, 11 ல் சஞ்சரிக்கும்போது மத்திம பலன்களும் நடைபெறும். உதாரணமாக மேடராசிக்குட்பட்ட இலங்கை இந்தியா, பாகிஸ்தான் என்பவற்றுக்குக் கன்னிஇராசியில் வியாழன் 6க்கு வந்தபோது அரசியலில் ஐக்கிய மனப்பான்மை குறைந்து நண்பர்கள் பகையாதலையும் கண்டோம். ஏனெனில் 6 ம்வீடு சத்துருஸ்தானமல்லவா? 7ல் வியாழன் வரும்போது அவர்சனிபார்வை பெறுவதினால்உள்ளக்குமுறல்கள் இருந்துகொண்டேயிருக்கும். 1970 ம் வருடம்கூட்டெண் (1970) 8 ஆவதினால் உலக நாடுகளில் பலபிரச்னைகள் உருவாகும்; இந்தியா இராசதந்திர துறையால் தன்னைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும்.

மீன இராசியால் ஆளப்படும் துருக்கி அரேபியா, செங்கடல், சுயஸ்கால்வாய், எகிப்து, இஸ்ரவேல் இவற்றுக்குஅட்டமத்துக்கு வியாழனும் ஏழைரச்சனியும் நடைபெறுவதினால் 1970 ல் அமைதியை எதிர்பார்க்க முடியாது. மிதுனத்தால் ஆளப்படும் வியட்னாம்பற்றி உலகத் தலைவர்கள்ஒருமுகப்பட்ட சமாதான அபிப்பிராயத்தைக்கொள்வர். வியட்னாம் பெயர் 8 ஐக் கொண்டுள்ளதால் ஒரு துன்பமும்

பெண்கள் அதிகமாக சினிமா அழகுராணிப்போட்டிகளில் ஈடுபடல், கலைகளில் ஆர்வம் காட்டல், கல்வியில் முன்னேற்றமடைதல் என்பவற்றில் வெற்றியடைவர் திருமணங்கள் அதிகமாக நடைபெற்றபோதும் விவாகரத்துக்களும் அதிகமுண்டு.

பாடல்களிலே வருமானம், நகைகள் இரத்தினங்கள் கிடைத்தல், சென்றவிடமெல்லாம் பொதுசன வரவேற்பு, அரசியலில் வெற்றி பெறுதல், வியாபாரம், விவசாயம் என்பன சிறப்படைதல் இவை பலன் உண்டு.

துலாம்: மன அமைதிக் குறைவு, ஓர் இடத்தில் நிரந்தரமாக இருக்கவிடாமை, வயிற்றிலே சுகக்குறைவு, தேகத்திலே அடையாளங்கள் ஏற்படுதல், காயங்கள் ஏற்படுதல், சுற்றத்தவர்கள் பகையாதல், தலைமயிர் உதிர்தல், கிரரோகம், தொழில் பங்கமடைதல் முயற்சிகள் குன்றுதல்.

விருச்சிகம்: யாத்திரைப் பேறு, உத்தியோக இடமாற்றம், தொழில்மாற்றம், வரவிலும் செலவதிகம், வழக்கு தொல்லைகளினால் பொருள் அழிவு, புண்ணியச்செய்கைகளில் பணத்தைச்செலவுசெய்தல், மனைவிமக்களைப் பிரிந்து தூரத்தேவாழ்தல், தொழில் வருவாய்க்காக எதியோப்பியா, புருணை, இங்கிலாந்து முதலிய நாடுகளுக்குச் செல்லுதல் இவைபலன் உண்டு.

தனு: மூத்த சகோதரங்களினால் லாபம், ஆளடிமைகளினால் லாபம், ஆபரணங்கள் கிடைத்தல், கல்வித்தேர்ச்சி, உத்தியோகச் சிறப்பு, தெளிந்த அறிவு, விவாகப்பேறு, காணி பூமி லாபம் காரியசித்தி, விவசாயத்தில் தொழில்முன்னேறுதல் கைத்தொழில்களில் ஈடுபடுதல் செல்வப் பேறுண்டு.

மகரம்: இடமாற்றம் அல்லது வீடுமாற்றல், பலவிடசஞ்சாரம், பொருட்தேட்டத்துக்காகப் பல இடங்களிலும் அலைந்து திரிதல், புதுவிதமான தொழில்கள் செய்தல், அவமானம் மனைவி மக்கள் வெறுத்தல், எதிர்பார்த்தலாபம் கிடையாமை இவைப்பலன் நடைபெறும்.

கும்பம்: பிதாவுக்குவிசேட பிரபல்யம், உத்தியோக உயர்ச்சி, மேலான தருமங்கள் செய்தல், தருமகாரியங்களில் பொருட் செலவு, தீர்த்த யாத்திரை, விவாகாதி சுபகருமங்கள் நடைபெறுதல், விவசாயம், வியாபாரம் முன்னேற்றமடைதல், ஆக்கம் சம்பந்தமான முயற்சிகளில் ஈடுபடல், பெரியோரால் அனுக்கிரகம் பெறுதல், பெரியபதவிகளில் திடீரென முன்னேறுதல் இவைபலன் நடைபெறும்

## இராசி பலன்கள்

மேடம்: விவாகப்பேறு, குடும்பசுகம், சுற்றஞ்சூழ வாழ்தல். பலராற் சன்மானம் பெறுதல், புத்திரர்களைப் பெறுதல் வஸ்திர ஆபரணலாபம், வியாபார பலிதம், வழக்கு வெற்றி.

# பெண்களுக்கு கலைகளில்மோகம்; விவாகரத்துகளும் அதிகமாகும்

இடபம்: மாதுலர்கள்பகையாதல், நோய் ஏற்படுதல், பகைவராற் துன்பம், ஆயுதங்களினால் காயம், சுற்றத்தவர்கள் பகைவர்களாதல், பணநட்டம், திருடர் பயம், சலகண்டம், நாய், சர்ப்ப, விஷபயம், வழக்குப் பேசுதல், சிறைவாசமனுபவித்தல், நாற்காற் சீவ நட்டம், எடுத்த கருமங்களில் தோல்வி, எதிலும் சந்தேகம், சந்தேகக்காரணமாகக் குடும்பப் பிரிவுகள், மந்தமான போக்கு,

மிதுனம்: தந்தை வர்க்க தேகசுகம், தந்தை வர்க்கத்தினால் நன்மைகள் அடைதல், சந்ததிவிருத்தியாதல், புத்திர[illegible] உபதேசங்கள் [illegible] புத்தி மனக்கூர்மை, உத்தியோக உயர்ச்சி வியாபார

மீனம்: குடும்பப் பிரிவு, மனக்கவலை, துன்பம் உயரமான பொருட்களில்இருந்து, தவறிவீழ்தல் குடல் வயிறு சம்பந்தமான ரோகம், மலேரியா, சீதபேதி என்ன வருதல், நீங்காத பல துன்பம், பொருட்செலவு, புத்திர சுகக்குறைவு, தொழில்கள் நட்டமடைதல் மரணபயம், விவாகக் குழப்பம் உண்டு.

இவை கோட்சார ரீதியாகக் கூறப்பட்டவை தெசாபுத்தி. சித்திரங்களையும் ஆராய்வது மிகவும் நல்லது.

# இந்து, இஸ்லாம்பாடங்கள் படிக்க

ஆசிரியருக்கு கடிதம்

## பல்கலைக் கழக விஷயத்தில் ஒற்றுமையுடன் வற்புறுத்தவேண்டும்

இலங்கையில் தமிழ் மக்களுக்கு ஒரு பல்கலைக்கழகம் அத்தியாவசியம் அமைவது யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. எங்களுக்குள் தமிழ்ப் பல்கலைக்கழகம் என்றோ இந்துப் பல்கலைக்கழகம் என்றோ அபிப்பிராயப் பேதப்பட்டு காலங்கடத்துவதால் ஒரு பல்கலைக்கழகமேனும் கிடைக்க வழியின்றி முயற்கொம்பாகிவிடுமென்பது சான்றோர் அறிந்த உண்மையாகும். பல்கலைக்கழக ஆய்குழுவினரால் ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்கவேண்டுமென்று வற்புறுத்திக் கூறியுள்ளனர். அரசியல்வாதிகள் பல்கலைக்கழக விஷயத்தில் அனுவசியமாகத் தலையிட்டு ஆட்சிமன்றத்திலும், மக்கள் மத்தியிலும் வீணாகப் பிரச்னையைப் பெரிதாக்கி, தமிழ் மக்களுக்குக் கிடைக்கவேண்டிய நல்ல சந்தர்ப்பத்தை இழக்கச் செய்துள்ளனர். சென்ற பதின்மூன்று வருடங்களாகத் திருக்கோணமலையில் பல்கலைக்கழகம் அமைவதா? யாழ்ப்பாணத்தில் அமைவதா என்ற பிரச்னையில் காலத்தைக் கடத்துகிறார்களேயொழிய ஒற்றுமையாக ஓரிடத்திலாவது ஒரு பல்கலைக்கழகம் அமைய வழி வகுக்கிறார்களேயில்லை. இதில் நாம் கண்ட உண்மை என்னவென்றால் எதிர்வரும் பொதுத்தேர்தலை அடிப்படையாகவைத்து வெற்றி வீரம் பேசிக் காலம் கழிக்கின்றனர். இதிலிருந்து நாம் உணரக்கூடியது தமிழர்கள் ஒற்றுமையாகத் தமிழ் மக்களுக்கு ஒரு பல்கலைக்கழகத்தைப் பெறுவதேயாகும் பெயரளவில் அது இந்துவகவோ தமிழாகவோ இருக்கலாம்.

ஆட்சிமன்றத்தில் எதிர்க்கட்சி அங்கத்தவர் திரு. ஆர். சேனநாயக்கா திருக்கோணமலையில் அமையும் பல்கலைக்கழகத்துக்குச் சிங்களப் பல்கலைக்கழகமெனப் பெயரிடவேண்டுமென்று கூறினார். யாழ்ப்பாணம் திருக்கோணமலை இடப்பிரச்னையில் பல்கலைக்கழகம் ஈடுபட்டிருக்கும் நேரத்தில் வேறு தலைவர்கள் தங்கள் தங்கள் பகுதிகளிலும் பல்கலைக்கழகப் அமைக்கச் சொல்லிக் கேட்கின்றனர். உதாரணமாக-- வவுனியா மட்டக்களப்புத் தலைவர்கள்.

### ஒற்றுமை இல்லையே

தமிழர்கள் ஒற்றுமையின்றி இருந்த காரணத்தினால் தமிழர்களுக்குக் கிடைக்கவேண்டிய அரிய சந்தர்ப்பத்தைப் படிப்படியாக இழந்துவருகின்றனர். உதாரணமாகத் தமிழ்ப் பகுதியில் ஒரு துறைமுக அபிவிருத்தி வேலை பற்றிப் பழைய சட்டநிருபண சபையில் விவாதிக்கப்பட்ட பொழுதுகாங்கேசன்துறைப் பிரதிநிதி தனது தொகுதியில் துறைமுகம் அமைக்க வேண்டுமென வாதாடினார். ஊர்காவற்றுறைப் பிரதிநிதி தனது தொகுதியில் நிறுவும்படியும்வாதாடினார். காலஞ்சென்ற முதல் பிரதமர் கௌரவ டி. எஸ். சனநாயக்கா பதிலளிக்கும்பொழுது தமிழ்ப்பகுதியில் கட்டாயம் ஒரு துறைமுக அபிவிருத்தி உண்டு. நீங்கள் ஒற்றுமையாகத் தீர்மானித்து அரசாங்கத்துக்கு அறிவிக்கும்படி கூறினார். அன்றைய பிரதமர் காங்கேசன்துறைத் துறைமுகத்தில் அபிவிருத்தி செய்யவேண்டுமென உணர்ந்துகொண்டார். இவர்கள் ஒற்றுமையாக இருந்திருந்தால் காங்கேசன்துறைத் துறைமுகத்தின் அபிவிருத்தியின் அத்திவாரக் கல்லைப் பழைய பிரதமர் டி. எஸ். சேனநாயக்கா ஆரம்பித்தும் துறைமுக வேலையைப் பூர்த்தியும்செய்திருப்பார். இன்று அவரின் மகனாகிய இன்றைய பிரதமர் டட்லி சேனநாயக்கா அடுத்தமாதம் கல் நாட்டு விழாவை ஆரம்பிப்பதாக அறிகின்றோம். இந்த விஷயத்தில் வேற்றுமையே காரணத்தினால் சுமார் இருபத்தி ஐந்து ஆண்டுகள் கடந்துவிட்டன, பல்கலைக்கழக விஷயமும் இதே போலில்லாது உடனடியாக சூழ்நிலைக்கு ஏற்ப யாழ்ப்பாணத்தில் ஓர் பல்கலைக்கழகம் அமைவது மிகச் சிறந்தது.

### யாழ்ப்பாணமே சிறந்த இடம்

யாழ்ப்பாணத்தில் இப்பல்கலைக்கழகம் அமைவதற்கு நாம் முழுக்க அரசினரின் கையை எதிர்பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. இதற்கு தமிழ்ப் பெருங்குடி மக்களின் சொத்துக்களே மூலாதாரமாக அமைந்துள்ளது. திருவாளர்கள் சேர் பொன். இராமநாதன் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் திரு. மழுவராயர் விட்டுச் சென்ற சொத்துக்கள் ஓர் பல்கலைக்கழகம் அமைக்கப் போதுமானவை.

இடவசதியைப் பொறுத்த

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஊழியர் பலர் சிங்களம் படித்துப் பரீட்சையும் எழுதி அதில் சித்தியடைந்துள்ளனர் குறிப்பிட்டகால எல்லைக்குள் சித்தியடையத் தவறிய ஊழியர்களும் கூட 1968-ம் ஆண்டு ஆகஸ்ப் மாதத்திலும் 1969-ம்ஆண்டு மார்ச் மாதத்திலும் நடந்த இரண்டு பரீட்சைகளிலும் பல புதிய ஊழியர்கள் சித்தியடைந் திருக்கிறார்கள். இவ்விரு பரீட்சைகளிலும் சித்தியடைந்தவர்கள் நிறுத்தப்பட்ட தங்களின் சம்பள உயர்வு, சேவையை உறுதிப்படுத்தல், சேவை முதுமை ஆகியவை சம்பந்தமாக தமது திணைக்களத் தலைவர்கள் மூலம் திறைசேரிக்கு விண்ணப்பித்தும் இதுவரை எதுவித பயனும் கிடைக்கவில்லையாம். இதனால் இம்மாதம் 22-ந் திகதி நடைபெறவிருக்கும் நிறைவேற்று எழுதுவினைஞர் வகுப்பு இரண்டாந்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரிமையுடையவர்களாக இருந்தும் அனுமதி வழங்க மறுக்கப்பட்டுள்ளார்களாம்.

இது ஒருபுறமிருக்க திறைசேரி 769-ம் இலக்க புதிய சுற்றுநிருபமொன்றை வெளியிட்டிருக்கிறது. இந்தச் சுற்று தடை, தமிழ்மொழிச்சட்ட (விசேஷ) விதிகள் இயற்றியும் பயனில்லை, இந்நாட்டில் தமிழ் மக்கள் வாழவேண்டுமென்று பெரும்பான்மை இனத்தவர் விரும்புகிறார்களா என்று கேட்கக்கூடிய அளவுக்கு அரசாங்கமும் அரசியல் தலைவர்களும் நடந்துகொள்கிறார்கள். சிங்களம் மட்டும் சட்டம்தான் இந்த நாட்டில் தேசிய ஐக்கியத்தைக் குலைத்து நாட்டின் முன்னேற்றத்தையும் தடைப்படுத்தியதென்பதை அனுபவ ரீதியாக நன்குணர்ந்தும் மீண்டும் மீண்டும் மொழிச் சிக்கலை ஏற்படுத்துபவர்களின் நோக்கம் என்னவென்பது புரிந்துகொள்ள முடியாமலிருக்கிறது.

சட்டங்களையும் சட்டவிதிகளையும் இயற்றிவிடுவதால் நாட்டின் ஐக்கியத்தையும் ஜனநாயகத்தையும் காப்பாற்றிவிடமுடியாது. ஆட்சியாளரும் அதிகாரபீடத்திலுள்ளவர்களும் மனிதாபிமானத்துடன் நடந்துகொள்வதில்தான் எல்லாம் தங்கியிருக்கிறது. அரசாங்கஊழியர் பிரச்னையில் பிரதமர் உடனடியாகக் கவனம் செலுத்துவது அவசியம்.

னும் ஏழைலை ரச்சனியும் நடைபெறுவதினால் 1970 ல் அமைதியை எதிர்பார்க்க முடியாது. மிதுனத்தால் ஆளப்படும் வியட்னும்பற்றி உலகத் தலைவர்கள்ஒருமுகப்பட்ட சமாதான அபிப்பிராயத்தைக்கொள்வர். வியட்னும் பெயர் 8 ஐக் கொண்டுள்ளதால் ஒரு துன்பமும் பிரிவுமுடைய நாடாகவே இருக்கும்.

**ஐக்கிய அரசுக்கு உதவுவர்**

இலங்கையில் பெரும்பான்மைமக்கள் ஒரு ஐக்கிய அரசாங்கத்தை அமைக்க முன்னின்று உதவுவர். சிறுபான்மையினர் தங்களுக்கிடையே ஒற்றுமையின்றி அலைகடற்துரும்பாய் அலைந்தபோதும் நாட்டரசியலில் பங்குகொள்வர். ஏற்றுமதிப் பொருட்களில் முதலிடம் வகிக்கும் தேயிலையின் விலை வீழ்ச்சியடையும். பொன்மயமான நெற்குவியல்கள் நாடெங்குமுண்டு. வேலையில்லாத் திண்டாட்டம் பெருமளவிற் குறையும். கைத்தொழிற் பேட்டைகளும் நவீன நகரங்களும் உருவாகும். புதுமுறைக் கல்வியினால் நாடெங்கும் ஏற்றமுண்டு. புடவைவியாபாரிகளும் பொன் வியாபாரிகளும் வெகு முன்னேற்றமடைவர். மற்றைய வியாபாரிகளுக்கும்நல்ல பொருள் வருமானமுண்டு. ஆயினும் கள்ளத் தராசு படிகள் அளவை நாடாக்கள் முழக்கோல்கள் வைத்திருப்பவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர்.

குடும்பப் பிரிவுகள், மந்தமான போக்கு,

மிதுனம்: தந்தை வர்க்க தேகசுகம், தந்தை வர்க்கத்தினால் நன்மைகள் அடைதல், சந்ததிவிருத்தியாதல், புத்திரோற்பத்தி, மந்திர உபதேசங்கள் பெறுதல், புத்தி மனக்கூர்மை, உத்தியோக உயர்ச்சி, வியாபார, விவசாயச்சிறப்பு, தொழிலில்லாதவர்களுக்குத் தொழில் கிடைத்த இவை பலன் உண்டு.

கர்க்கடகம்: கல்வியில் மேம்பாடடைதல், மேல் நாட்டுக் கல்வி, ஸ்கொலர்சிப் என்பன கிடைத்தல், வாகனங்கள்சேருதல், தானிருக்குமிடங்களிலே சுபகருமங்கள் நடைபெறுதல், வெற்றி, கீர்த்தி, உள்நாட்டு அரசியலிலே பங்குபெறுதல் திருப்பணிகள் செய்தல், ஆலயம் தடாகங்கள் அமைத்தல், இலாபகரமான இடமாற்றம், வியாபாரச்சிறப்பு, வேளாண்மைச்சிறப்பு, விவசாயப் பேறு என்பனவுண்டு

சிங்கம்: எடுத்த கருமங்கள் தோல்வி, சகோதர பழிபகை, கலகம், வேலையாட்களின் உபத்திரவம், பிற்சகோதர சுகக்குறைவு தொழிற்கேடு தொழில் நட்டம், உத்தியோகத்தை விட்டு விலகல், விலககல் மனைவி மககள் துயர் உண்டு.

கன்னி: அதிர்ஷ்ட்லாபங்கள் கிடைத்தல், சன விருத்தி தானிய தம்பத்து குடும்ப சுகம் கல்விப்பேறு. பரீட்சைகளில் வெற்றிபெறுதல், காதல்கை கூடிவருதல், விவாகப்பேறு, கலைகள், பேச்சு, ஆடல் களினால் லாபம், ஆபரணங்கள் கிடைத்தல், கல்வித் தேர்ச்சி, உத்தியோகச் சிறப்பு, தெளிந்த அறிவு, விவாகப்பேறு, காணி பூமி லாபம்

கக் கூறப்பட்டவை தெசா புத்தி. சித்திரங்களையும் ஆராய்வது மிகவும் நல்லது.

அமைக்கச் சொல்லிக் கேட்கின்றனர். உதாரணமாக-- வவுனியா மட்டக்களப்புத் தலைவர்கள்.

மூலாதாரமாக அமைந்துள்ளது. திருவாளர்கள் சேர் பொன். இராமநாதன் ஸ்ரீ ல ஸ்ரீ ஆறுமுகநாவலர் திரு. மழுவராயர் விட்டுச் சென்ற சொத்துக்கள் ஓர் பல்கலைக்கழகம் அமைக்கப் போதுமானவை.

இடவசதியைப் பொறுத்தமட்டில் யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியின் ஒருபக்க கட்ட அமைப்பே பல்கலைக்கழகக்கட்டடச் சாயலைக் கொண்டதாகும். அந்த நல்நோக்கத்திலே அப்பெருமகன் அக்கல்லூரியை ஸ்தாபித்தார் இவர்களுடைய நல்நோக்கம் நிறைவேற வழிவந்த நாங்கள் ஒற்றுமையாக பரமேஸ்வராக்கல்லூரியை பல்கலைக்கழகமாக அமைக்க நாம் முயற்சி செய்வோம்.

**ஒற்றுமையுடன் வற்புறுத்த வேண்டும்**

அரசியல் வாதிகளும் கல்விமான்களும் மற்றும் சகல பொதுமக்களும் முழுமன ஒற்றுமையாக அரசினரிடம் ஏகோபித்த குரலில் மேற்குறிப்பிட்ட இடத்தில் அமைக்க வேண்மென்று வற்புறுத்திக் கூறல் வேண்டும். இப்பெரும் கைங்கரியம் நிறைவேறினால் தமிழ்ப்பிள்ளைகளின் எதிர்காலம் மிகவும் சுபீட்சமாக அமையும். அப்பொழுதுதான் மேல்நாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் போட்டி போட்டுக்கொண்டு தமிழ்ப்பகுதியில் அமையும் பல்கலைக்கழகத்தை வளர்ச்சி அடையச் செய்வார்கள். உலக நாடுகளில் இலங்கைத் தமிழர்களும் கல்வியில் உச்சநிலையை அடைவார்கள். தமிழர்களுடைய சகல கலைகளும் இப் பல்லைக்கழகத்தில் அமைவதனால்வேற்றுமொழியினர் தமிழர்களுடைய கலைகலாச்சாரங்களை நன்கு உணர்வார்கள்.

—க. செ. பா,
புன்னாலைக்கட்டுவன்

# இந்து, இஸ்லாம்பாடங்கள் படிக்க சர்வகலாசாலையில் வசதியில்லை

## தமிழாசிரியர் சங்கத்தலைவர் கவலை

யாழ்ப்பாணம், ஞாயிறு

''இந்துசமயம். இந்து கலாச்சாரம், இஸ்லாம் சமயம், இஸ்லாம் கலாச்சாரம் போன்ற பாடங்களைச் சர்வகலாசாலையில் தமிழ் மாணவர்கள் படிக்க வசதி செய்யப்படவில்லை. தமிழ்த் தலைவர்கள் தங்களுக்குள் வேறுபட்டு தமிழ் இனத்துக்குரிய பல கருமங்களையும் சிதறடித்து வருவதுபோல் தமிழ் மாணவர்களுக்கான பல்கலைக்கழகத்திலும் பிரச்னைப்பட்டு வருகின்றார்கள்''

அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. ஆர். கந்தையா இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி சங்கத்தின் இருபத்திரண்டாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நடைபெற்றது.

யாழ். நகர முதல்வர் திரு. எஸ். நாகராஜா விழாவைக் குத்துவிளக்கேற்றி வைத்து சிறப்புரை நிகழ்த்துகையில் இலங்கையில் பலம் வாய்ந்த ஆசிரியர்சங்கம் இதுவேதான் என்றும், ஆசிரியர்களுக்கு இடமாற்றப் பிரச்னையே இருக்கக்கூடாதென்றும் இருப்பினும் இலங்கையின் எந்தத் தமிழ்ப்பாடசாலையிலும் கடமையாற்ற தமிழ் ஆசிரியர்கள் சகலரும் சித்தமாயிருக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

விழாவுக்குத் தலைமை வகித்த திரு. ஆர். கந்தையா ஆசிரியர் தமது தலைமையுரையில் மேலும் குறிப்பிட்டதாவது:

இலங்கை சுதந்திரமடைந்த பத்து வருடங்கள் வரை சிங்களத்துடன் சம உரிமை வகித்துவந்த தமிழ் கடந்த 10 வருடங்களாக பல சிக்கலுக்குள் அகப்பட்டு தத்தளிக்கின்றது. தாய்மொழி மூலம் கல்வி கற்கும் மாணவர்கள் உயர் கல்வியைப் பெறுவதற்கு வழிவகைகள் காணப்படல் வேண்டும். இங்கு சிங்கள மொழிக்குரிய பல வாய்ப்புகளும் தமிழுக்கும் கொடுக்கப்படல்வேண்டும்.

இந்நாட்டிலிருக்கும் ஒரு லட்சத்து பன்னிரண்டாயிரம் ஆசிரியர்களுடைய நிலையும் நன்கு பயன்படல் வேண்டும். உலகத்திலுள்ள பல நாடுகளிலும் சிந்திக்கப்படும் ஆசிரியர்களுடைய அந்தஸ்து இலங்கையிலும் பேணப்படல்வேண்டும் ஐக்கியநாடுகள்சபையில் கல்வி, விஞ்ஞான, கலாச்சாரப் பகுதி இது பற்றி ஆராய்ந்து வெளிப்படுத்திய எண்ணங்கள் ஆழ்ந்து பரிசீலிக்கப்பட வேண்டியன முன்னேற்றமான நாடுகளில் ஆசிரியருடைய கல்வித்தரம், வாழ்க்கைத்தரம், சமூக மதிப்புப் போன்ற வற்றிலுள்ள ஒழுங்குமுறைகள் நமது நாட்டிலும் கைக்கொள்ளப்படல் வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

வித்தியாதிபதி திரு. எஸ் தணிகாசலம் பேசுகையில் ஆசிரியர்கள் இடமாற்றம் அவர்கள் தலைபெழுத்து என்றும், அதில் தனது எழுத்துப் சேர்ந்துள்ளதாகக்குறிப்பிட்டார், மற்றும் பலர் பேசினார்கள். (கா. நி)

# சங்கரலிங்கம இறந்தபோது காமராஜர்என்ன சொன்னார்

## தமிழக முதல்வர் கேட்கிறார்

சென்னை, நவம்பர் 1

''இன்று சீக்கிய தலைவர் பெருமான் இறந்ததற்கு அனுதாபம் தெரிவிக்கும் காமராஜர் அன்று சங்கரலிங்கனார் இறந்தபோது அவர் பட்டினி கிடந்து செத்தார்' என்று கேலியாகக்கூறினார் அந்தத் தியாகியின் உடலைப் பரிசோதனை செய்து எந்தவிதமான மரியாதையும் செய்யாமல் அனதைபோல் அடக்கம் செய்வதற்குக் காரணமாக இருந்தார் ஒரு அனுதாபக் கூட்டம் நடத்துவதற்குக் கூட அவர் அனுமதிதரவில்லை''

இவ்வாறு ஈரோடிலுள்ள 'கொடுமுடி' என்ற இடத்தில் நடைபெற்ற தி மு கழகப்பொதுக்கூட்டத்தில் தமிழக முதல்வர் கருணநிதி குறிப்பிட்டார்

அவர்மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

'பத்தாயிரம்கொடுத்தால் தலைவரை விலைக்கு வாங்கலாம். இரண்டுகோடி கொடுத்தால் தி.மு.க. அரசையே விலைக்கு வாங்கலாம்' என்று காமராஜர் கூறுகிறார். சென்னை மேயர் தேர்தலில் அவரது ஆட்களையே நாங்கள் விலைக்கு வாங்கிய விஷயம் அவருக்குத் தெரியாது போலும்' எமக்குத் தந்தவரட்சி நிதியை எமது கட்சிக்குப் பயன்படுத்தினால் இந்திய அரசையே விலைக்கு வாங்கி இருப்போம்.

இன்னும் காமராஜர் தம் மீது கோபப்படுவதற்குக் காரணம். இந்திராவிடம் அவர் பட்ட அடிதான் என்று குறிப்பிட்டார்.

# உழைப்பின.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி

கொள்வது.

ஜெர்மன் ஜனநாயகக் குடியரரையும், சமஷ்டி ஜனநாயகக் குடியரசையும் ஐக்கியநாடுகள் சபையில் அங்கம் வகிக்க வற்புறுத்துமாறு இலங்கை அரசைக் கோருவது. தாய்ச் சங்கப் பிரதிநிதியான வழக்கறிஞர் ஜெயபத்திரான, திரு. பி. குமாரசாமி ஆகியோரும் பேசினர்கள். யாழ். கிளையின் நிர்வாகிகளாகப் பின் வருவோர், தெரியப்பட்டனர்:

தலைவர்: மேயர் எஸ். நாகராஜா, உபதலைவர்கள்: எஸ். துரைராஜசிங்கம், எஸ், வைத்திலிங்கம், எஸ். மகேஸ்வரன், செயலாளர்: எஸ். பி. நடராஜா, பொருளாளர்: எஸ். மாணிக்கவாசகர். 15பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரியப்பட்டது. (கா. நி.)

# காந்தி விழா

மானிப்பாய், ஞாயிறு

நவாலி முருகானந்த சனசமூகநிலையத்தாரால் காந்தி நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. நிலையத் தலைவர் மகாத்மா காந்திஜியின் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்தார்.

உயிர்கள் அனைத்தும் ஆத்மா அந்த ஆத்மாக்கள் எல்லாம் வாழ்வாங்குவாழ வழிகாட்டி ஆத்மாக்களில் மகாத்மாவாகத் திகந்தார். காந்திஜி' என திரு எஸ் அருமைநாயகம் பேசுகையில் குறிப்பிட்டார். திருவாளர்கள் சோ. நிர்மலேஸ்வரன் வை. கமலநாதன் ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

# 'தற்போதைய கல்விமுறை பொருளாதாரத்துக்கு தவாது'

—வங்கிநிபுணர்

கோட்டை, சனி

'இலங்கையில் தற்போதுள்ள கல்விமுறை நாட்டின் பொருளாதாரத்தை விருத்திசெய்யத்தக்கதாக அமையவில்லை இதனால் கல்வியின்பொருட்டுச் செலவாகும் பணத்தின்மூலம் திருப்திகரமான நன்மையைப் பெறமுடியவில்லை

உலக வங்கி நிபுணரும், தென்கிழக்காசியாவின் பிரதான பொருளாதார நிபுணருமான திரு எம் ஜி புளோபெல் பத்திரிகைகளுக்களித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் படித்து வேலையற்ற மாணவர்கள ஏராளமானோர் இருக்கிறரெனில் இது நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்யத்தக்க வகையில் கல்விமுறை அமையவில்லை என்பதையேகாட்டுகிறது மாணவர்களுக்குச் செய்முறைக் கல்வியளிக்கவேண்டும் அப்பொழுதுதான் அவர்கள பாடசாலையைவிட்டு வெளியேறியதும் எத்துறையிலும் தொழில்புரியமுடியும் எனக குறிப்பிட்டார்

# மலேரியா தடுப்பு மருந்து

கோப்பாய், சனி

இப்பகுதியில் மலேரியா நோய் தடுப்பு இயக்கத்தார் வீடு வீடாகச் சென்று தடுப்பு மருந்து தெளித்து வருகின்றனர்.

# தமிழ்-சிங்கள கலாச்சார தூதுவருக்கு பாராட்டு விழா

தமிழ் மொழியில் சிறந்த பாண்டித்தியம் பெற்ற தென்னிலங்கை இலும்பே மகாவித்தியாலய அதிபரும் சிங்கள ஆசிரியருமான திரு. டீ. டீ. நாணயக்காராவுக்கு இம்மாதம் 6-ம் திகதி சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. வி. சிவசுப்பிரமணியம் தலைமையில் பாராட்டு விழாவொன்று நடைபெறவிருக்கிறது

தமிழ்மொழி மீதும், தமிழர் மீதும் இவர் கொண்டுள்ள அபிமானத்திற்கும், பற்றுக்குமாகவே இந்தப் பாராட்டு விழா இவருக்கு நடைபெறுகிறது

சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி பழைய மாணவர் இவர். இலங்கை வாழ் தமிழ் மக்களின் ஒற்றுமைக்கு ஒரு பாலம்போல அமைந்துவருகிறார்.

தமிழக அறிஞர் ராஜகோபாலாச்சாரியாருடைய சிறுகதைத் தொகுதியை சிங்களத்திலும், 'காவிய சேகரம்' என்ற சிங்கள இலக்கியத்தை தமிழிலும் திரு. நாணயக்காரா மொழிபெயர்த்துக்கொண்டிருக்கிறார், தமிழ்மொழிச் சிறப்பையும், தமிழ்ப்பண்பாட்டையும் ஒரு கலாச்சாரத்தூதுவர்போல் பரப்பி வருகிறார். இலங்கை வாழ் மக்களின் ஒற்றுமைக்கு ஒரு பாலம் போல் உழைத்துவருகிறார்.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மண்டபத்தில் வரும் வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் பாராட்டு விழாவில் திரு. நாணயக்காரா 'சிங்கள-தமிழ் இலக்கியங்கள்' என்னும் பொருள் பற்றி உரை நிகழ்த்துவார்

—க. க

**இன்று இலவச படக்காட்சி**

இன்றுமாலை 6 மணிக்கு திருநெல்வேலி கிழக்கு வாலையம்மன் சனசமூக நிலையத்தின் ஆதரவில் வாலையம்மன் கோவில் முன்றலில் இலவசபடக்காட்சி நடைபெறும். பிள்ளைகள்உட்பட அனைவரும் அழைக்கப்படுகின்றனர். 1453

ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சவேரியார் வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு நவம்பர் மாதம் 2 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org